www.tamilarangam.net

# தூண்டில்

RAYA
87 RUE DE COLOMBES
600 ASNIERES SUR SEINE ; FRANCE




TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR:8

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சில குறிப்புகள்

உங்கள் அனைவரிடமிருந்தும் "தூண்டில்" ஆக்கங்களை வரவேற்கிறது. ஆக்கங்கள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்படுதல் விரும்பத்தக்கது. ஆக்கதாரர்கள் தமது பெயர், முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

## சிறுகதை, கவிதை

சிறுகதைகள் முழுத்தாளில் 8 பக்கங்களுக்கு மேற்படாமலமைந்திருக்க வேண்டும். கவிதைகள் முழுத்தாளில் 2 பக்கங்களுக்கு மேற்படாமல் அமைந்திருக்க வேண்டும். தமிழ் சமுதாயத்தில் காணப்படும் பிரச்சினைகளையும், அவற்றுக்கான தீர்வுகளையும் கருப் பொருட்களாகக் கொண்ட கதைகளையும், கவிதைகளையும் அதிகமாக எதிர் பார்க்கிறோம்.

## கட்டுரைகள்

கட்டுரைகள் முழுத்தாளில் 6 பக்கங்களுக்கு மேற்படாமல் அமைந்திருக்க வேண்டும். மருத்துவக் கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. கீழே எழுதப்பட்டுள்ள சில விடயங்களை கட்டுரைகளுக்காக சிபாரிசு செய்கிறோம். இவை தலைப்புகளாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

01. அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் பிள்ளைகளின் எதிர்காலம்?
02. அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் தமிழர்களின் எதிர்காலம்?
03. அரசியல் தஞ்சம் கோரியிருப்பவர்கள் நாடு திரும்பியபின் எதிர்கொள்ள இருக்கும் பிரச்சினைகள்?
04. அரசியல் தஞ்சம் கோரியிருப்பவர்கள் தமது நேரத்தை எப்படி பயனுள்ளதாக்கிக் கொள்ளலாம்?
05. அரசியல் தஞ்சம் கோரியிருப்பவர்கள் தாய்நாட்டின் புனருத்தாரணத்திற்கு எப்படி உதவலாம்?
06. அரசியல் தஞ்சம் கோரியிருப்பவர்கள் தாய்நாட்டில் பாதிப்படைந்திருப்பவர்களுக்கு எப்படி உதவலாம்?

## நூல் அறிமுகம்

இப் பகுதியில் ஈழத்தவர்களின் முயற்சிகள் அறிமுகம் செய்யப்படுகின்றன. நூல் வெளியீட்டாளர்கள் போதுமான தகவல்களுடன் தமது வெளியீட்டின் பிரதி ஒன்றை எமக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

உங்கள் அனைவரிடமிருந்தும் "தூண்டில்" பற்றிய கருத்துகள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாங்களும் நேரமும்

அரசியற் தஞ்சம்கோரி இலங்கையிலிருந்து மேற்கு நாடுகளுக்கு வந்தவர்களை மேலோட்டமாகப் பார்த்தால் பதினாறு வயதிலிருந்து முப்பது வயதுவரையானவரே பெரும்பான்மையாக உள்ளனர். இவர்களில் அனேகமாக இருபாலாரும் அடங்கியுள்ளார்கள். இலங்கையிலிருக்கும்போது பாடசாலைக்குப் போய்க்கொண்டும் அல்லது வேலைக்குப் போய்க்கொண்டும் அல்லது இவையெவற்றிற்கும் வசதியற்றுமிருந்த இந்தப் பெரும்பான்மையினர் மேற்கு நாடுகளுக்கு அதுவும் குறிப்பாக மேற்கு ஜேர்மனிக்கு வந்தபின் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்?

மேற்கு ஜேர்மனியின் அரசியற் தஞ்ச சட்டங்களில் அகதிகள் குறிப்பிட்ட காலத்திற்கு(?)வேலை செய்யக்கூடாதென்றும், தங்குவதற்கு அனுமதிக்கப்பட்ட நகரத்தை விட்டு வெளியேறக்கூடாதென்றும் இரண்டு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இவை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டாலும் பொதுவாக பெரும்பாலான அகதிகளை ஒரேமாதிரியாகத்தான் பாதித்துக் கொண்டிருக்கின்றன. இக்கட்டுப்பாடுகளால் தாங்கள் எப்படிப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அகதிகள் முழுமையாகப் புரிந்துகொண்டிருக்கிறார்களா?

உதாரணத்திற்கு ஒரு தமிழ் இளைஞனை எடுத்துக் கொள்வோம். இலங்கையிலிருக்கும்போது பாடசாலைப்படிப்பை முடிக்காதவனாக இருந்தால் மேற்கு ஜேர்மனிக்கு அரசியற் தஞ்சம் கோரிவந்ததும் தனது படிப்பைத் தொடர(சிலவேளை)முயற்சித்துப்பார்ப்பான். மொழி தடையாக நிற்கும். சரி மேற்கு ஜேர்மனிக்கு வர ஏற்பட்ட செலவையாவது முதலில் உழைப்போம் என்றால் அதற்கும் அரசியல் தஞ்சச் சட்டம் தடையாக நிற்கும். முக்கியமான தேவைகள் இரண்டையும் நிறைவேற்றமுடியாத நிலையில் வந்தது தான் வந்தோம். இடங்களையாவது பார்ப்போம். தெரிந்த ஆட்களைச் சந்திப்போம்என்றால் அதற்கும் அரசியற் தஞ்சச்சட்டம் தடையாகநிற்கும். இந்நிலையில் தங்கியிருக்கும் நகரத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுற்றித் திரிவதைத் தவிர வேறு வழியில்லை. அதுவும் எத்தனை நாளைக்கு? வேலை செய்யமுடியாத நிலையில் சமுகஉதவிப் பணமாகக் கிடைக்கும் ஒவ்வொரு மார்க்கும் பெறுமதியானவை. இந்நிலையில் தங்கியிருக்கும் கட்டிடத்திலேயே அடைந்து கிடப்பதைத்தவிர அந்த இளைஞனுக்கு வேறு வழி தெரியவில்லை.

தொடர்ந்து எந்த மாற்றமும் இல்லாமல் ஒரேயிடத்தில் தங்கியிருக்கும் அந்த இளைஞனுக்கு சலிப்பும், விரக்தியும் ஏற்படுகிறது. முன்பின் யோசிக்காமல் குடியை ஆரம்பித்து பின் மதுவிற்கு அடிமையாகி விடுகிறான். குடிபோதையில் மற்றவர்களுடன் மோதுகிறான். சமையல், சலவை நேரம்போக எஞ்சியிருக்கும் நேரத்தில் என்ன செய்வதென்று தெரியாத நிலையில் வீடியோப்படங்களை அடுத்தடுத்துப் பார்ப்பதிலும், சீட்டாடுவதிலும், அரட்டையடிப்பதிலும் படுத்திருப்பதிலும் நேரம் போகிறது. இப்படியே நாட்களைக் கடத்துவதால் அந்த இளைஞனுக்கு என்ன நன்மை கிடைக்கும்? தாய்நாட்டிலிருக்கும் அவன் குடும்பத்திற்கு என்ன நன்மை கிடைக்கும்? இப்படியே சீரழிந்தபின் தாய்நாட்டிற்கு திரும்பிப் போனால் தனது எதிர்காலத்திற்காகவேனும் அந்த இளைஞன் ஏதாவது செய்ய வேண்டாமா?

இவைதான் அகதிகளுக்கு மேற்கு ஜேர்மனியின் அரசியற் தஞ்சச்சட்டங்கள் ஏற்படுத்தும் பாதிப்புகள். இதற்கு நாங்களும் உடந்தையாக இருக்கிறோம் என்பதே உண்மை. அரசியற் தஞ்ச சட்டங்களால் அகதிகளுக்கு ஏராளமான நேரம் கிடைக்கிறது. இந்த மேலதிக நேரத்தில் நாங்கள்தான் எங்களைப் பாழடித்துக் கொள்கிறோம் என்ற கசப்பான உண்மையை நாம் எல்லோரும் உணரவேண்டும். சில அத்தியாவசிய வழிகளை மூடி, அகதிகளைச் செயலிழக்கப்பண்ணி, அவர்களின் நேரத்தை அபரிமிதமாக்கி, சிந்தனையை மழுங்கடித்து சுய நினைவையே இழக்கச் செய்யக்கூடிய சட்டங்களுக்குப் பலியாகாமல் எங்களை நாங்கள்தான் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். இல்லையேல் எங்கள் எதிர்காலம் முழுமையாகப் பாழாக்கப்படுவதுடன் எங்களைச் சார்ந்தவர்களும் பாதிக்கப்படுவார்கள். மேற்கு ஜேர்மனியின் அமைச்சர்களும், உயரதிகாரிகளும் தமிழர்கள் தாய் நாட்டிற்குத் திரும்புவதை ஊர்ஜிதப் படுத்திக் கொண்டிருக்கும் இந்தக் கடைசி நேரத்திற்கூட விழித்தெழாதவர்களின் நிலை பரிதாபகரமாகவே இருக்கும்.

வேலை செய்யாதே, படிக்காதே என்று சட்டங்கள் எங்களைக் கட்டிப்போட்டிருக்கையில் நாங்கள் என்ன செய்வது என்று கேள்வி எழலாம். அச்சட்டங்கள் முழுமையாக எங்களைக் கட்டிப் போடவில்லை. எங்களைச் சுற்றிப் போடப்பட்ட கயிற்றை எடுத்து நாங்கள்தான் முடிச்சுப் போட்டு மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறோம். இதை முதலில் புரிந்துகொண்டால் முடிச்சை சுலபமாக அவிழ்க்கலாம் என்பது உறுதியாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ன செய்யலாம் என்பதை எழுதுவதற்கு முன் சில தமிழ் நண்பர்கள் என்ன செய்தார்கள்?என்ன செய்கிறார்கள்? என்ற உதாரணங்கள் சிலவற்றைத் தருகிறோம்.

- கோர்ண, பிராங்பேர்ட், டோற்முண்ட், ஸ்ருட்காட், மார்ஸ்பேர்க், ஒபகௌசன், பொன் ஆகிய நகரங்களிலிருந்து தமிழ் நண்பர்களின் முயற்சியால் சஞ்சிகைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.
- ஒபகௌசன் நகரில் தமிழ் நண்பர் ஒருவர் தமிழ் எழுத்துக்களைக் கொம்பியூட்டரில் கோர்க்கும் முயற்சியில் வெற்றி பெற்றுள்ளார்.
- பாட் நொயஸ்ரட்டில் தமிழ் நண்பர் ஒருவர் ஜேர்மன் உதைபந்தாட்டக் குழுவில் அங்கம் வகிக்கிறார்.
- முல்கைம் நகரில் தமிழ் நண்பர்கள் சைக்கிள் திருத்தும் நிலையம் வைத்திருக்கிறார்கள்.
- லாடன்சைட், காகன், கற்றிங்கன் நகர்களில் வாசிகசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- முன்ஸ்ரர் நகரில் தமிழ் நண்பர் ஒருவர் பூப்பந்தாட்டத்தில் முதலிடம் வகிக்கிறார்.
- டோற்முண்ட் நகரில் தமிழ்ப்பாடசாலையொன்று நடைபெற்று வருகிறது.
- கேர்ண, ஸ்ருட்காட் நகரங்களில் பெண்கள் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- கோர்ண்பக், எஸன், மார்ஸ்பேர்க், ஸ்ருட்காட், நகரங்களிலிருந்து தமிழ்–டொச் அகராதிகள் வெளிவந்துள்ளன.
- விற்றன் நகரில் பொது நூல்நிலையமொன்றில் தமிழ்ப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

இவையெல்லாம் எங்களுக்குக் கிடைத்த தகவல்களே. இவற்றைத்தவிர ஏனைய நகரங்களிலும் பல முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கலாம். ஆர்வமுள்ள வாசகர்கள் தங்களுடைய நகரங்களில் என்னென்ன முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன? என்ன அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன? இவை எப்படித் தமிழ் அகதிகளுக்குப் பயன்படுகின்றன? போன்ற விபரங்களைத் தூண்டிலுக்கு அனுப்பினால் பொருத்தமானவற்றைப் பிரசுரிப்போம்.

மேலே எழுதப்பட்டுள்ள உதாரணங்களுக்கு காரணமான தமிழ் நண்பர்களுக்கு இவையெப்படிச் சாத்தியமாகின? இவர்களுக்கு மட்டும் அரசியற் தஞ்சச் சட்டங்களில் சலுகை கொடுக்கப்பட்டுள்ளதா? அல்லது இவர்களது தஞ்ச நிலைமையில் விசேட அக்கறை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்டப்படுகிறதா? இவர்கள் மட்டும் இப்படியான முயற்சிகளைச் செய்ய முன்வந்து வெற்றிபெற்றபோது ஏனையவர்கள் சட்டம் தடுக்கிறது என்று சொல்லிவிட்டுப் படுத்திருந்தால் அது ஏற்றுக்கொள்ளக் கூடியதா? ஒரே மாதிரியான நிலைமைகளில் இருந்துகொண்டே சிலர்மட்டும் முயற்சி செய்ய மற்றவர்கள் சும்மாயிருக்கலாமா? அரசியற் தஞ்ச சட்டங்களால் ஏற்படும் ஏற்படப்போகும் பாதிப்புகளைப்பற்றி முதலில் எழுதியிருக்கிறோம். இவற்றிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவாவது இப்படியான முயற்சிகளைச் செய்யக்கூடாதா?

என்ன செய்யலாம் என்று கேட்டால் எவ்வளவோ செய்யலாம். பொருட் செலவில்லாத சிரமதான முயற்சிகளும் பொருட் செலவு செய்து தனிப்பட்ட ரீதியிலும் எங்களை அபிவிருத்தி செய்துகொள்ளும் வாய்ப்புகள் நிறையவேயுள்ளன.

அந்நிய நாடொன்றில் தங்கியிருக்கும் போது அந்நாட்டின் மொழியைத் தெரிந்திருப்பது இன்றியமையாதது. நகரசபைக்குப் போய் எமது பிரச்சனைகளைத், தேவைகளை தெரிவிப்பதற்கும், மருத்துவரிடம் போவதற்கும், சட்டத்தரணியை நாடுவதற்கும், தொழில் வாய்ப்பைத் தேடுவதற்கும் மொழி தெரிந்திருப்பது அவசியமாகும். எப்பொழுதும் எல்லாவற்றிற்கும் மொழிபெயர்ப்பாளரைத் தேடிக்கொண்டிருக்க முடியாது. எங்களுக்குத் தேவையான நேரத்தில் மொழிபெயர்ப்பாளருக்கு நேரம் கிடைக்குமா என்பது சந்தேகமே. ஆகவே ஒவ்வொருவரும் மொழியைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அகதிகளுக்கு இந்நாட்டு மொழியைக் கற்பதற்கு இலவச வகுப்புகளை ஏற்பாடு செய்துதர ஒவ்வொரு நகரத்திலும் பல சமூகசேவை நிறுவனங்கள் தயாராக உள்ளன. படிப்பதற்கு நாங்கள் தான் தயாராக வேண்டும்.

வீடியோப்படங்கள் பார்ப்பதிலேயே நேரத்தை செலவிடாமல் வாசிப்பதிலும் நமது நேரத்தைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். மேற்கு ஜேர்மனியிலிருந்து பத்துக்கு மேற்பட்ட சஞ்சிகைகள் தமிழ் நண்பர்களால் வெளியிடப்படுகின்றன. எமக்குக் கிடைத்த தகவல்களின்படி பெரும்பாலான சஞ்சிகைகளுக்கு (தூண்டில் உட்பட) முன்னூறுக்கும் குறைவாகவே வாசகர்கள் இருக்கிறார்கள். 27,000 தமிழ் அகதிகள் இருக்கும் மேற்கு ஜேர்மனியில் முன்னூறு பேருக்கு மட்டும்தான் வாசிக்கத் தெரியுமா? அல்லது குமுதம், இதயம் போன்றவை தான் வாசிக்க வேண்டுமென்று மற்றவர்கள் நினைக்கிறார்களா? எம்மவர்களின் முயற்சிக்கு நாங்கள் ஆதரவளிக்காமல் வேறு யார் ஆதரவளிப்பது?

எத்தனையோ பேரிடம் கதை, கவிதைகளை படைக்கும் திறமை இருக்கிறது. ஆனால் சோம்பலிலும், அநாவசியமான அலுவல்களில் ஈடுபடுவதாலும் இப்படியானவர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டாமல் வாளாதிருக்கிறார்கள். இனியும் இப்படியான நிலையைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடராமல் இப்போதே எழுத ஆரம்பிக்க வேண்டும். ஏராளமாக எழுதுவதால்- ஏற்படும் பயிற்சி நிச்சயம் சிறந்த கதாசிரியர்களையும் கவிஞர்களையும், கட்டுரையாளரையும் உருவாக்கும்.

எல்லோரும் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதாலும், ஆக்கங்களை எழுதியனுப்புவதாலும் இங்கு வெளிவரும் சஞ்சிகைகள் நாலைந்து மாதங்களிலேயே நின்றுவிடக்கூடிய அபாயத்தைத் தடுக்கலாம்.

இலங்கையின் கல்வி முறைக்கும் ஜேர்மன் நாட்டுக் கல்வி முறைக்கும் பெருமளவில் வித்தியாசங்கள் உள்ளன. கல்வியறிவை விருத்தி செய்வதற்கும், டொக்டராகவோ, இஞ்சினியராகவோ வந்து சமுதாயத்தில் உயர் அந்தஸ்து தேடிக்கொள்ளவுமே எங்களில் பலர் பாடசாலைக்குப் போகிறார்கள். இலங்கையின் கல்விமுறையும் இதற்கு ஏதுவாகவே அமைந்துள்ளது. ஒருவர் சுயமாகத் தொழில் செய்வதற்குத் தேவையான அநுபவம் படிப்புகள் இலங்கையில் குறைவு. அத்துடன் அப்படித் தேடிப் போவனர்களும் குறைவு. இதற்கு தமிழ்ச் சமுதாயமும் ஒரு காரணமாகும்.

ஆனால் மேற்கு நாடுகளில் தொழிற்கல்விக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இதனால் எல்லோரும் பட்டப் படிப்புக்கே அலையாமல் அனைத்துத் தொழிற் துறைகளிலும் பயிற்சி பெறுகிறார்கள்.

மேற்கு நாடுகளுக்கு அரசியற் தஞ்சம்கோரி வந்த தமிழர்கள் நாம் இலங்கைக்குத் திரும்பிப் போனதும் தொழில் செய்யக்கூடிய வாய்ப்புகள் அங்கே காத்துக்கொண்டிருக்கின்றன என்று நினைத்துக் கொண்டிருப்பார்களேயாயின் அது அவர்களின் தவறான கருத்தாகும். எனவே ஒவ்வொருவரும் சுயமான தொழில் செய்வதற்குத் தேவையான தகுதியை, பயிற்சியை தற்போது தங்கியிருக்கும் நாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு சமூக சேவை நிறுவனங்களுடைய உதவியை நாடலாம்.

இலங்கையிலிருக்கும் போது பாடசாலைக்குப் போகாததிற்குப் பல காரணங்கள் இருக்கலாம். வசதியில்லையென்பதும் இந்தக் காரணங்களில் முக்கியமானதொன்றாகும். ஆனால் மேற்கு நாடுகளிலிருக்கும் தமிழ் அகதிகளுக்கு இது பொருந்தாது. எனவே தேவையற்ற சாக்குகளைச் சொல்லி எங்களை நாங்களே ஏமாற்றிக் கொண்டிருக்காமல் ஏதாவது ஒரு தொழிற் கல்வியைக் கற்றுக்கொள்வது சாலச்சிறந்தது. (விசாக்களில் பல்கலைக்கழக அநுமதி மறுக்கப் பட்டிருப்பதாகவே முத்திரை குத்தப்பட்டுள்ளது.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படிப்பு என்றவுடன் கொம்பியூட்டர் மட்டும் தான் என நினைத்துக் கொள்ளாமல் புகைப்படமெடுத்தல், தச்சு வேலைகள், புத்தகம் கட்டுதல், மின் இணைப்பு வேலைகள் போன்ற பலதரப்பட்ட தொழில்களையும் பயில வேண்டும். இப்படி எல்லோரும் தொடர்ந்து பயிற்சி பெறுவதன் மூலம் சுயதேவை பூர்த்தி செய்யப்படுவதுடன் வருமானம் பெறக்கூடிய தொழிலாகவும் இருக்கும். சலவை, சிகை அலங்காரம் போன்றவை கூட இந்நாடுகளில் கலையாகவே கற்பிக்கப்படுகிறது. அந்தஸ்து மாயையைத் தூக்கியெறிந்துவிட்டு எல்லோரும் எல்லாவற்றையும் கற்றுக் கொள்ள வேண்டும்.

இவை தவிர எங்கள் நேரத்தைப் பயனுள்ளதாக்கச் சில சமூகப் பொறுப்புகளும் காத்திருக்கின்றன. மேற்கு நாடுகளிலிருக்கும் தமிழ்ச் சிறுவர்கள் தாய் மொழியிலிருந்து அந்நியப்படுத்தப்படுவதால் ஏற்படப்போகும் பாதிப்புகள் பற்றி கலம் மூன்றில் எழுதியுள்ளோம். ஒவ்வொரு நகரத்திலிருக்கும் சிறுவர்களுக்கு அந்தந்த நகரங்களிலுள்ள இளைஞர்கள், யுவதிகள் தாய் மொழியைக் கற்பிக்கலாம். காகிதத்தில் விளையாட்டுக்கள் போன்ற கை வேலைகளைக் காட்டிக் கொடுக்கலாம். அவர்களுக்கு நடனம், நாடகம், பாடல்கள் போன்றவற்றைப் பழக்கி விழாக்களில் மேடையேற்றலாம்.

ஒவ்வொரு நகரிலும் தமிழர்கள் ஒன்றுகூடி ஒவ்வொரு அமைப்புகளை ஏற்படுத்தி அதன் மூலம் அந்நகரத்திலுள்ள தமிழ் அகதிகளுக்கு உதவலாம். ஏதாவது பிரச்சனைகள் என்றால் ஒன்றாக குரல் கொடுக்கலாம். வாசிகசாலை அமைத்துக் கொள்ளலாம். சஞ்சிகைகள் வெளியிடலாம்.

செய்வதற்கு எவ்வளவோ இருக்கின்றன. இங்கு நாம் எழுதியவை சொற்பமே. ஆறு பக்கங்களுக்கு எழுதுமளவிற்கு இவ்வளவு விடயங்கள் இருக்கும்போது செய்வதற்கு ஒன்றுமில்லையென்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ள முடியுமா? முன்னேற வழியொன்றுமில்லையே என்று முக்கால் அழுதுகொண்டு வீடியோப்படங்களை விழுந்தடித்துப் பார்ப்பதிலும், நகைகளை வாங்கி கழுத்திலும் கைகளிலும் அடுக்குவதிலும், தண்ணியடிப்பதிலும், அரட்டையடிப்பதிலும் நேரத்துடன் எங்களையும் பாழடித்துக் கொள்ளாமல் இனியாவது பயனுள்ள அலுவல்களில் ஈடுபட வேண்டும். எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு காதல் நிராகரிக்கப்படுகிறது

மறுபடியும் கண்கள் வலப்பக்கம் திரும்புவதை ஜீவனால் தவிர்க்க முடியவில்லை. விட்டுவிட்டான். அவள் மறுபடியும் தெரிந்தாள். ஜீவனின் கண்கள் தன்னில் ரோந்து செய்வதை அறியாமல் ஆசிரியர் கரும்பலகையில் எழுதுவதைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

அப்போதும் அவள் அழகாகவே இருந்தாள்.

ஜீவனின் கண் நரம்புகள் அவசரமாக மூளைக்கு 'சிக்னல்' கொடுக்க, அதுவும் அவசரமாக விரித்து கடமையைக் கவனித்தது.

'அதென்னென்டு டொச் பெட்டையளுக்கு இப்பிடி செழுமையான கன்னங்கள்? கட்டையாக வெட்டப்பட்ட பின்பும் தலைமுடி அழகாக இருப்பதன் மர்மம் என்ன? உதடுகள் ஏன் சிவந்து இருக்கவேணும்? அந்தக் கழுத்தும், பிறகு.'.' 'ஏ'த்தனமாக ஜீவன் ரசிப்பதற்கு முன் வகுப்பு முடிந்து விட்டது.

அவன் சோர்வாக எழுந்தான். இனி அவளைப் பார்க்க வேண்டுமானால் நான்கு தினங்கள் அவன் பொறுத்தேயாக வேண்டும். பெருமூச்சொன்று சுதந்திரமாய் அவனிலிருந்து நீங்கியது. கொப்பிகள், புத்தகங்களை பையினுள் நிரப்பி, பையைத் தோளில் மாட்டினான்.

மாணவர்கள் அவசரமாக வகுப்பறையை விட்டு கலைந்திருந்தனர். அவர்களுக்கு எவ்வளவோ அலுவல்கள். ஆண்பால்கள் 'புறெயின்டிளையும்' பெண்பால்கள் 'புறெயின்டவையும்' சந்திக்க வேண்டும். கடைகளுக்குப் போய் கடைசியாக வந்த கிழிந்த உடைகளைத் தெரிவு செய்ய வேண்டும். ஐஸ்கிறீம் சூப்பிக் கொண்டு ஸ்ரட்டுக்குள் நிற்க வேண்டும். சத்தமாகச் சிரிக்க வேண்டும்.

பார்த்திபன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜீவன் அந்தக் கட்டிடத்தை விட்டு வெளியே வந்தான். அவனும் உட்பட ஏனைய சனங்கள் பாதையில் நடமாடிக் கொண்டிருந்தார்கள். அநேகமான கார்கள் "பிளேபிறையில்" இயங்கிக் கொண்டிருந்தன. குழந்தையொன்று தள்ளுவண்டியில் பொம்மையைப் பருக்க வைத்துச் சிரத்தையாகத் தள்ளிக்கொண்டு போக, பின்னால் அப்பாவும், அம்மாவும் ஒருவரையொருவர் அணைத்தபடி வந்துகொண்டிருந்தார்கள்.

ஜீவன் பஸ் தரிப்பில் நின்றான். மனம் முழுக்க அவள் நிறைந்திருந்தாள். அவன் அந்தக் கொம்பியூட்டர் வகுப்பில் சேர்ந்த ஆரம்ப நாளே அவள் அவனைச் சலனப்படுத்தி விட்டாள். செயற்கை அழகுகளால் பூச்சுப் போடாத அவள் அழகு உண்மையிலேயே அவனைக் கவர்ந்துவிட்டது. அவளைப் பார்ப்பதும், பாடங்களைக் கவனிப்பதுமாக அவன் சிரமப்பட்டுக் கொண்டிருந்தான்.

மூன்றும் நாளே தனது அவஸ்தைக்குக் காரணம் 'காதல்' கிருமிகள்தானென அவன் தீர்மானித்துவிட்டான். ஒரு வாரத்திலேயே அவனுக்கு ஏராளமான கனவுகள் வர ஆரம்பித்துவிட்டன.

பஸ் வர ஜீவன் ஏறிக் கொண்டான்.

வகுப்பில் மாணவர்களின் பெயரைக் கூப்பிட்டு ஆசிரியர் வரவைப் பதியும்போதுதான் ஜீவனால் அவளின் பெயர் ஸில்வியா என அறிந்து கொள்ள முடிந்தது. அதைத் தவிர அவளைப் பற்றிய வேறெந்த விபரங்களையும் அவனால் சேகரித்துக் கொள்ள முடியவில்லை. வகுப்பு ஆரம்பமாவதற்கு முன் எல்லோரும் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளும் 'கலோ'வை அவளும் அவனுக்குச் சொன்னாள். அதைத் தவிர வேறெந்த வித்தியாசமான நடவடிக்கைகளையும் அவனால் அவளில் கண்டுபிடிக்க முடியவில்லை. வகுப்பில் பாட நேரத்தில் அவளைப் படம் பிடிப்பதோடு அவனது 'காதல்' ஒவ்வொரு முறையும் காற்புள்ளி வைத்துக் கொண்டிருந்தது.

என்றாலும் ஜீவன் மனம் தளரவில்லை. அவனுடைய நம்பிக்கைக்கு காரணமிருந்தது. அவனுடைய நண்பர்களிலேயே அவன்தான் டொச்சை நன்றாகவும் சரளமாகவும் பேசக் கூடியவன். அந்தத் தகுதியிற்தான் கொம்பியூட்டர் படிக்க ஆரம்பித்திருந்தான். இந்த டொச் திறமை தனது 'காதலுக்கு' கை கொடுக்கும் என்று அவன் நம்பினான். காத்திருந்தான்.

அவன் எவ்வளவோ முயற்சி செய்தும் டொச்காரர்கள் தங்களுடைய காதலை வெளிப்படுத்த என்ன 'மெதேட்டை' நடைமுறைப்படுத்துகிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனாலேயே அவன் தன்னுடைய 'காதலை' ஸில்வியாவுக்குத் தெரியப்படுத்த முடியாமல்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தவித்துக் கொண்டிருந்தான். ஒவ்வொரு 'தலோ'வைத் தவிர அதிகமாக வேறெதுவும் கதைத்துக் கொள்ளும் சந்தர்ப்பமே இதுவரை வரவில்லை.

ஜீவனுக்கோ இந் நிலை மிகவும் சிரமமாக இருந்தது. காதல் பற்றிய அவனது கற்பனை முற்றிலும் வேறு விதமாகவே இருந்தது. ஏராளமான தமிழ்ப் படங்களைப் பார்த்ததின் விளைவாக காதலியுடன் பூங்காக்களில் ஓடிப் பிடித்து விளையாடுவதும், 'றெஸ்ரோறன்டு'களில் சிரித்துச் சிரித்துச் சாப்பிடுவதும், அசிங்கமாக ஆளை ஆள் கட்டிப் பிடிப்பதும்தான் காதல் என்று அவன் நினைத்திருந்தான்.

இவை எதுவுமே நடைமுறையில் இதுவரை சாத்தியப்படாததால் தனது கற்பனைகளை கனவுகளிலேயே அவனால் அனுபவிக்க முடிந்தது.



www.tamilarangam.net

ஒருநாள் அரை மணித்தியாலம் முன்னதாகவே ஜீவன் வகுப்புக்கு வந்து விட்டான். ஆச்சரியமாக ஸில்வியா விறந்தை ஜன்னலில் தனித்து நின்றாள்.

வகுப்பறை பூட்டியிருந்தது. பாடங்கள் ஆரம்பிப்பதற்கு ஐந்து நிமிடங்கள் முன்னதாகத்தான் கதவு திறக்கும். ஏனெனில் உள்ளே கொம்பியூட்டர் உட்பட பெறுமதியான பொருட்கள் இருந்தன.

ஜீவன் வழக்கம் போல 'கலோ'வைச் சொல்லிவிட்டு ஸில்வியாக்கு எதிர்ப்புறமாக நின்று கொண்டான். அவளும் 'கலோ'வைத் திருப்பிக் கொடுத்துவிட்டு கையிலிருந்த புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள்.

'அரிய சந்தர்ப்பம். நழுவ விட்டுவிடாதே' என்று மூளை ஆலோசனை வழங்க, இதயம் அவனுக்கு உற்சாகமளிக்கு முகமாக வேகமாக இயங்கி இரத்தத்தை குபுக்கிக் கொண்டிருந்தது. ஜீவன் என்ன செய்யலாம் என்று குழம்பிக் கொண்டிருந்தான்.

எந்த நேரத்திலும் மற்ற மாணவர்கள் வந்து விடலாம். இதைப் போல இன்னொரு சந்தர்ப்பம் கிடைக்குமா என்பது சந்தேகமே.

ஜீவன் இரண்டாவது விரல் நகத்தைக் கடித்துத் துப்பிவிட்டு, மூன்றாவது விரலை வாய்க்குள் கொண்டு போனபோதுதான் அந்த ஆச்சரியம் நிகழ்ந்தது.

"நீங்கள் எந்த நாட்டிலிருந்து வந்திருக்கிறீர்கள்?" ஸில்வியா முதன் முதலாக ஜீவனை விசாரித்தாள். (தமிழில் அல்ல. தமிழ்படுத்தப் படுகிறது)

ஜீவனுக்கு உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை திடீரெனக் குளிர்ந்தது. வார்த்தைகள் கூட ஆச்சரியப்பட்டு சிரமமாகவே வந்தன.

"சிறிலங்கா"

"இங்கு அரசியல் தஞ்சம் கோரியிருக்கிறீர்களா?" என்ற ஸில்வியாவின் கேள்வியில் அவள் விசயம் தெரிந்தவள் என்பதை ஜீவன் புரிந்து கொண்டான்.

"ஆம்"

"இங்கு வந்து எத்தனை வருடங்களாகின்றன?"

"நான்கு வருடங்கள்"

"நன்றாக டொச் கதைக்கிறீர்கள்."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜீவன் வெட்கமாகச் சிரித்துவிட்டு அவள் கையிலிருந்த புத்தகத்தைப் பார்த்தான். மூன்றும் உலக நாடுகளில் பெண்கள் என்று தலைப்பிடப்பட்டு, கறுப்பாக ஒரு பெண் தலையில் குடத்துடன் நின்றாள்.

'கண்ட கண்ட புத்தகங்களையெல்லாம் இவளேன் படிக்கிறாள்' என்று ஜீவன் கவலைப்பட்டான். இலங்கையிலுள்ள 'அசிங்கங்கள்' எல்லாம் அவளுக்குத் தெரிய வந்து விடுமோ என்று அவனுக்குப் பயமாக இருந்தது.

"இந்த நாடு உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?" அவனுடைய சிந்தனையை அறியாமல் ஸில்வியா கேள்விகளைத் தொடர்ந்தாள்.

"நன்றாக"

"எப்படித்தான் கவர்ந்திருந்தாலும் உங்களுடைய சொந்த நாட்டில் பெற்றோர், சகோதரர்கள், நண்பர்களுடன் இருப்பதைப் போன்ற மனநிறைவு இங்கே இருக்கும்போது உங்களுக்கு இருக்காது என்று நினைக்கிறேன். அப்படித்தானே?"

'அப்படியில்லை' என்று உண்மையைச் சொல்ல நினைத்தாலும் "ஆம் நீங்கள் சொல்வது சரி" என்றான். இந்த உரையாடலை எப்படி 'காதல் லைனுக்கு' கொண்டு வருவது என்று ஜீவன் யோசிக்கும் போது ஏனைய மாணவர்கள் வரத் தொடங்கினார்கள்.

வகுப்பறை திறக்கப்பட்டு பாடம் ஆரம்பமாகியது. ஜீவன் அன்று உற்சாகமாயிருந்தான். முதல் படியில் கால் வைத்து விட்டதாகப் பெருமைப்பட்டுக் கொண்டான். அடுத்த சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தான்.

பரீட்சார்த்த முயற்சியாக அடுத்த வாரமும் அரை மணித்தியாலம் முன்னதாகவே ஜீவன் வந்தான். அன்றும் ஸில்வியா தனியாகவே புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். பஸ் வசதியின்மையால் அவள் ஒவ்வொரு முறையும் நேரத்துடனேயே வருவதாக ஜீவன் கணித்துக் கொண்டான்.

வழக்கமான 'கலோ'ப் பரிமாறலின் பின் "ஏன் இன்று சீக்கிரமாகவே வந்து விட்டீர்கள்?" என்று ஸில்வியா ஆரம்பித்தாள்.

"உங்களுக்குப் போலவே எனக்கும் பஸ் வசதியில்லை"

காதலுக்கும், பொய்களுக்கும் இருக்கும் நெருங்கிய தொடர்பை நினைத்து ஜீவன் வியந்து கொண்டான்.

"நீங்கள் என்னென்ன வழிகளில் பொழுதைக் கழிக்கிறீர்கள்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஸில்வியா உண்மையான ஆர்வத்துடன் விசாரித்தாள்.

"எங்களுக்கெங்கே நேரம் இருக்கிறது? அதிகாலை பத்துப் பதினொரு மணிக்கு நாலும், நண்பர்களும் எழும்புவோம். மதியச் சமையலை ஆரம்பித்தால் முடிவதற்குள் பிற்பகல் இரண்டு மணியாகிவிடும். சாப்பிட்ட பின் வீடியோவில் படம் பார்ப்போம். படம் முடிந்து சிறு இடைவேளையின் பின் இரவுச் சமையல் ஆரம்பிக்கும். அதை முடித்து, ஆற வைத்து விட்டு போத்தல்களை எடுக்க ஆரம்பித்து விடுவோம். பிறகு சாப்பிட்டு விட்டு, மறுநாளும் அதிகாலை எழும்ப வேண்டுமென்பதற்காக ஒரு மணி, ஒன்றரை மணிக்குள் படுத்து விடுவோம்"

ஜீவன் சொல்லி முடித்ததும் ஸில்வியா கலகலவென சிரிப்பைச் சிந்தினாள். ஜீவன் அவற்றைப் பொறுக்கி மனதுக்குள் போட்டுக் கொண்டான்.

சிறிது நேரத்தின் பின் "உங்கள் வாழ்க்கை உண்மையிலேயே சோகம் தான்" என்றாள் முகத்தை 'ஸீரியசாக' வைத்துக் கொண்டு. அவளுக்குள் ஒரு பரிதாபத்தை ஏற்படுத்தியதில் அடுத்த வெற்றி என்று ஜீவன் நினைத்துக் கொண்டான்.

ஏனைய மாணவர்கள் வரத் தொடங்க அவர்களுடைய உரையாடல் முடிவடைந்தது.

அதன் பின் ஒவ்வொரு முறையும் ஜீவன் அரை மணித்தியாலம் முன்னதாகவே வர அவர்களின் உரையாடல்கள் தொடர்ந்தன. சில வாரங்களில் 'ஸீ' மறைந்து 'து' அமுலுக்கு வந்து விட்டது. எனினும் ஸில்வியா அவனுடைய நாட்டைப் பற்றியும், அங்கு வாழும் மக்களைப் பற்றியும், இங்குள்ள அகதி வாழ்க்கையைப் பற்றியுமே மட்டும் விசாரித்தாளெயொழிய அவனில் வேறெந்த 'விசேட' அக்கறையும் காட்டவில்லை.

ஜீவன் தன்னுடைய 'தூய்மையான காதலை' வெளிப்படுத்த முடியாமல் தவித்துக் கொண்டிருந்தான். கொம்பியூட்டர் ஐந்து மாதங்களைக் கடந்திருந்தது.

பஸ்ஸில் போகும்போதும், அறையில் இருக்கும் போதும் ஜீவன் தன்னுடைய காதலைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான். இந்த ஐந்து மாதங்களிலும் ஸில்வியா அவனை முழுமையாக ஆக்கிரமித்திருந்தாள். தனது காதல் காய்ச்சலாகவே மாறிவிடுமோ என்று அவனுக்கு பயமாக இருந்தது.

இந்தத் தவிப்புக்கு தீர்வு காணும் முகமாக பரம்பரை, பரம்பரையாக தமிழ்க் காதலர்கள் கடைப்பிடித்து வரும் 'கடிதம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடு ளாது' முறையை ஜீவன் தெரிவு செய்தான். தெரிவு செய்த அன்றே டொச் இலக்கணத்தில் ஆழமாக இறங்கி தன்னுடைய காதலை வெள்ளைக் கடுதாசியில் 'மை'ப்படுத்தினுன். பத்துக் கடிதங்களை கிழித்தெறிந்த பின் பதினென்று திருப்தியைத் தந்தது.

கடிதம் தயார். இனி அதை எப்படி ஸில்வியாவிடம் சேர்ப்பிப்பது?

அதற்குக்கூடத்தான் பண்டைய காதலர்கள் வழிகாட்டியிருக்கிருர்களே? . ஸில்வியா வைத்திருக்கும் புத்தகங்களில் ஒன்றைப் படித்து விட்டுத் தருவதாக வாங்குவது, அதற்குள் கடிதத்தை வைப்பது, பிறகு புத்தகத்தைத் திருப்பிக் கொடுப்பது என ஜீவன் செயல்களை ஒழுங்குபடுத்திக் கொண்டான்.

"அந்தப் புத்தகத்தைத் தருகிருயா? படித்து விட்டுத் தருகிறேன்" ஜீவன் தைரியப்படுத்திக் கொண்டு கேட்டான்.

"நிச்சயமாக. மிக நல்ல புத்தகம். படித்துவிட்டு எப்படியிருக்கிறது என்று சொல்" ஸில்வியா புத்தகத்தைக் கொடுத்தாள். மண்டேலாவைப் பற்றிய புத்தகம். இதை யார் படிப்பது என்று நினைத்துக் கொண்டே வாங்கிக் கொண்டான்.

அடுத்த வாரம்.

கடிதம் ஒளித்திருந்த புத்தகத்தை கொஞ்சமாக வியர்த்திருந்த ஜீவன் ஸில்வியாவிடம் திருப்பிக் கொடுத்தான். அவள் புத்தகத்தைப் பற்றிய அபிப்பிராயத்தைக் கேட்டாள். ஏற்கெனவே தயாரித்து வைத்திருந்தபடி ஜீவன் தாராளமாகப் பொய் சொன்னுன். அன்றைய பாட நேரத்தில் காலநிலைக்குச் சம்பந்தமில்லாமல் ஜீவன் வியர்த்திருந்தான்.

கொடுத்த கடிதத்திற்கான விடை தெரியும் நாள்.

முதல் நாளிரவே ஜீவனுல் நன்ருகத் தூங்க முடியவில்லை. ஸில்வியா வெட்கப்படுவது போலவும், தேவாலயம் ஒன்றில் இருவரும் மோதிரம் மாற்றிக் கொள்வது போலவும், பிறகு அழகாக அலங்கரிக்கப்பட்ட கட்டிலில் இருவரும் .... போலவும் கெட்ட கனவுகள் வந்து உபத்திரவப்படுத்தியிருந்தன.

படபடக்கும் நெஞ்சத்துடன் வந்தவன் ஸில்வியாவைக் காணுமல் திருக்கிட்டான். 'சுகமில்லையோ?'

வகுப்பறை திறக்கப்பட்டு மாணவர்கள் உள்ளே நுழையும் போது ஸில்வியா வந்தாள். வந்தவள் ஜீவனைக் கவனிக்கவே இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜீவன் குழப்பமாக உட்கார்ந்திருந்தான். தேர்தல் முடிவுக்காக காத்திருக்கும் அரசியல்வாதிகளைப் போலவே அவனது நிலையும் இருந்தது. அவனால் பாடத்தில் ஈடுபட முடியவில்லை. கொப்பியைத் திறந்து கண்டபடி பேனாவால் கிறுக்கினான்.

பாடங்கள் முடிந்து எல்லோரும் வெளியேறும் போது ஸில்வியா மாணவன் ஒருவனுடன் உராய்ந்தபடி கதைத்துக் கொண்டு போவதை ஜீவன் அவதானித்தான். கனத்த நெஞ்சுடன் அவர்கள் பின்னால் நடந்தான்.

ஸில்வியா அந்த மாணவனின் தலையைக் கலைத்தாள். கன்னத்தில் கிள்ளினாள். அவன் விடைபெறும்போது அவள் பின்பக்கத்தில் தட்டிவிட்டுப் போனாள்.

ஜீவனுக்கு உடம்பெல்லாம் எரிந்தது. 'என்னுடைய ஸில்வியாவை இன்னொருவன் தொடுவதா? அவனை நான் விடுவதா? அக்ககக்கா' என்று பாய அவன் என்ன சினிமாக் கதாநாயகனா?. தனக்குள் கொதித்துக் கொண்டிருந்தான். அந்த வெப்பத்தில் உடல் வியர்த்தது.

மாணவர்கள் எல்லோரும் போய் முடிந்ததும் ஸில்வியா எதுவும் நடவாததுபோல் அவனை நோக்கி வந்தாள்.

'ராட்சசி. விருப்பமில்லையென்டு நேர சொல்லியிருக்கலாம்தானே. இப்படிச் செய்து காட்ட வேணுமே. வெள்ளைக்காறற்றை குணத்தைக் காட்டிப் போட்டாள்' என்று ஜீவன் பொருமிக் கொண்டிருந்தான்.

அவனை நெருங்கிய ஸில்வியா 'கலோ' என்றாள். ஜீவன் பேசாமல் நின்றான்.

"இப்போது நான் நடந்து கொண்டதைப் பார்த்து நீ என்ன நினைத்தாய்?" ஸில்வியா ஆச்சரியமான கேள்வியொன்று கேட்டாள்.

ஜீவனுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. 'இவளேன் இப்படி கேக்கிறாள்? என்ரை காதல் ஆழமானதுதானோ என்டு சோதிச்சுப் பாக்கிறாவோ? விசர்ப்பெட்டை. நான் என்ன சின்னப் பெடியனே?' என்று தனக்குள் சிரித்துக் கொண்ட ஜீவன் "உன்னை அவன் தொட்டபோது எனக்கு ஆத்திரமாக இருந்தது. அவனுடன் சண்டை பிடிக்க வேண்டும் போலிருந்தது. நீ அவனுடன் அப்படிப் பழகியதற்காக உன்னைக் கோபித்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது." என்றான். அவள் மேல் உள்ள காதலையும், அக்கறையையும் இதைவிட வேறெப்படியும் தெரிவித்திருக்க முடி

(தொடர்ச்சி 21ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




வீரகேசரிச் செய்திகள்.

1.7.88

முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்பில் இந்திய அமைதிப்படை முகாம் அமைக்கும் பொருட்டு முப்பத்தாறு குடும்பங்களை கடந்த ஆண்டு நவம்பர் மூன்றாம் திகதி ஒருமணிநேர அவகாசத்தில் வீடுகளைவிட்டு வெளியேற்றியது. இன்று ஏழு மாதங்களாகியும் அங்கு சென்று குடியிருக்க அம்மக்கள் அனுமதிக்கப்படவில்லை. அன்றிலிருந்து இன்றுவரை அகதிகளாகத் தெருத்தெருவாக அலைகிறார்கள்.

நொச்சிமுனைக் கிராமோதயத்தலைவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். ஜே.வி.பி குறித்து தகவல் வழங்கியதற்காக நான்குபேர் கொல்லப்பட்டனர்.

2.7.88

யாழ்ப்பாணத்தில் பண்டத்தரிப்பில் கனகசபை என்பவரின் மகள் அவரது வீட்டிலிருந்து பலாத்காரமாக வெளியே கொண்டுவரப்பட்டு ஆயுதம் தரித்த இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

3.7.88

கனடிய அரசு 3787 விதவைகளான தமிழ்ப் பெண்களுக்கு சுயதொழிற்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கென ஐந்து இலட்சம் ருபாவை திருமலை மாவட்ட அகதிகள் நலன்புரிச்சங்கத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

வடக்குக் கிழக்கில் ஏழு இந்தியப்படையினரும் இரண்டு தீவிரவாதிகளும் பலியானதாக இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

பண்டாரியவெளியில் நாகதம்பிரான் ஆலயத்தில்வைத்து சுதா எனப்படும் இளைஞர் போட்டித் தீவிரவாத இயக்கமொன்றினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

4.7.88

"கிழக்கு மாகாண மக்களின் விருப்பமின்றி நிரந்தரமான இணைப்பு சாத்தியமில்லை. இலங்கை-இந்திய உடன்படிக்கையின்படி நான் நடப்பேன்" -ஜே.ஆர்.

5.7.88

இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்ட யோகராசா, ஜொலி என்ற பெயர்களை உடைய இரண்டு இளைஞர்களின் சடலங்களை முருங்கன் சந்தியிலிருந்து இந்தியப்படையினர் மீட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

6.7.88

சம்பள உயர்வின்மேல் தொழிற்சங்க நடவடிக்கை என இலங்கைத் தோட்டச்சேவையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

"நாட்டின் மூன்றிலொரு பகுதியைப் பிரபாகரன் ஆளப்போகிறார். இந்த ஆட்சியாளர்கள் பஸ்ஸில் பிரயாணம் செய்யமுடியுமா?" – அசரா.

விடுதலைப்புலிகள் இயக்கத்தினரையும் அதன் தலைவர் திரு. வி. பிரபாகரனையும் இலங்கைத் தமிழர்களின் ஏகப்பிரதிநிதியாக ஏற்கும் கோரிக்கை உலகத்தமிழ் மகாநாட்டில் நிராகரிக்கப்பட்டது.

காங்கேசன்துறைப் பொலிஸ்ப் பகுதியில் இருபத்திரண்டு வயதான பெண் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

7.7.88

நெடுங்கேணி, ஒலுமடு, மணியார்குளம் ஆகிய கிராமங்களில் இந்திய இராணுவம் தேடுதலை மேற்கொண்டபோது இருபத்தாறுபேர் காயங்களுக்குள்ளாகி வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கை, கால் மற்றும் உடல் அடிகாயங்களுக்கு இலக்காகியுள்ளனர்.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்குப் புறப்பட்ட இ.போ.ச பஸ் நேற்றுக்காலை மன்னம்பிட்டியில் வைத்து ஆயுதம் தாங்கிய இளைஞர்களால் கொள்ளையடிக்கப்பட்டது.

8.7.88

கொழும்பில் இளம்பிள்ளைவாதம் பரவிவருகிறது.

நெடுங்கேணியில் நடந்த தேடுதல் வேட்டையின்போது மக்கள் மோசமாகத் தாக்கப்பட்டதில் 34 பேர் காயமடைந்தனர்.

9.7 88

நாவலப்பிட்டித் தோட்ட சுப்ரின்டன் வேறு இரு உதவிச் சுப்பிரண்டன்களும் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். தொழிலாளரின் சம்பளப்பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் தமிழர் பிரதேசங்கள் தொடர்ந்தும் பறிபோகின்றன. துரிதமாக நடக்கும் இந்தத் திட்டமிட்ட குடியேற்றம் தொடர்பாக எவ்வளவோ ஆட்சேபனைகள், புகார்கள் தெரிவிக்கப்பட்டும் இது நிறுத்தப்படவில்லை.

சோவியத் விண்கலமொன்று பதின்மூன்று நாடுகளின் சாதனங்களுடன் செவ்வாய்க்கிரகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த விண்கலம் செவ்வாயைச் சுற்றிவந்து அதன் சந்திரன்களில் ஒன்றில் தரையிறங்கும்.

கரவெட்டியைச் சேர்ந்த பி. ஜெகதீஸ்வரன் தட்டிவான் ஒன்றுக்குள் வைத்து இனந்தெரியாதோரால் வெட்டிக் கொல்லப்பட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஜே.வி.பி உதவியின்றி சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வரமுடியாது" - புடவைக் கைத்தொழில் அமைச்சர்.

ஏழுவூரில் இரு பிள்ளைகளுடன் சென்ற தம்பதிகள் கடத்திச் செல்லப்பட்டனர். இத்தம்பதியினரின் வீட்டிற்கு இந்தியப்படையினர் வருவதுண்டாம்.

மட்டுநகர் பெரியநீலாவணையில் சேனைக்குடியிருப்பு ஆசிரியரான சின்னத்துரை சங்கரலிங்கம் என்ற இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கிளிநொச்சிப் பாரதிபுரத்தில் மாணிக்கம் கணபதி என்ற இளைஞர் சுட்டும், குத்தியும் கொல்லப்பட்டார்.

11.7.88

தென்னிலங்கையில் அரசாங்கம் என்னதான் பாதுகாப்பு நடவடிக்கை எடுத்தாலும் தீவிரவாதிகளால் நடாத்தப்படும் கொலைகள் தினசரி அதிகரித்துக் கொண்டே வருகிறது. கடந்த மாதம் மாத்திரம் மாத்தறைப்பகுதியில் 31 கொலைகள் நடைபெற்றிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிளிநொச்சிப் பகுதிக் கிராமங்களில் இடம்பெற்றுவரும் கொள்ளைகளினால் மக்களிடையே பீதியும் பயமும் நிலவுகிறது.

# அமைதிப்படையின் அக்கிரமங்கள்

சிறீலங்காவில் தமிழ் சிவிலியன்களுக்கெதிராக பாரதூரமான மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் இந்திய ஆக்கிரமிப்பு ராணுவப் படைகள் ஈடுபட்டுள்ளது உண்மைதானா?

போராளிகளுக்கும் இந்தியப் படையினருக்குமிடையே உக்கிரமான போர் நடக்கும் பகுதிகளுக்குச் செல்ல சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கும், வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டது உண்மைதானா?

ஆம் எனில், இதற்கான காரணங்கள் என்ன? போரில் படுகாயமுற்றவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவ மறுப்பது ஏன்?

இந்திய ராணுவத்தின் மனித உரிமை மீறல் பற்றிய செய்திகள் உண்மையானால், இந்திய மற்றும் சிறீலங்கா அரசுகளுடன் தொடர்பு கொண்டு மனித உரிமை மீறலுக்கு எதிரான நமது கடுமையான கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும்.

அதே சமயம் சிறீலங்கா அரசிடம், போராளியோ, ராணுவத்தினரோ யாராக இருந்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி செய்ய செஞ்சிலுவைச் சங்கத்திற்கு உள்ள உரிமையை விளக்கி எல்லாவகையிலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைத் தடுப்பது முறையல்ல என்று கோர வேண்டும்.

(இலங்கையில் இந்திய அமைதிப் படையின் மனித உரிமைமீறல் பற்றி நெதர்லாந்து பாராளுமன்றத்தில் 10.12.87 அன்று உறுப்பினர் டிமென்க் தோல் எழுப்பிய கேள்விகள்.)

புதிய ஜனநாயகம்:16-31 ஜூலை 88.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

13.7.88

இலங்கையின் தற்போதைய நிலைமைகுறித்து ஆராய்வதற்காக சுவிஸ் தூதுக்குழு ஒன்று இலங்கைக்குச் செல்லவுள்ளது. இதன்பின்னரே அங்குள்ள தமிழ் அகதிகளை திருப்பியனுப்புவதுகுறித்து முடிவுசெய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை அகதிகளைத் திருப்பியனுப்புவது தொடர்பாக சுவிஸ் அரசு எந்தவொரு முடிவும் எடுக்கவில்லையென சுவிஸ் தூதுவர் தெரிவித்தார்.

ரத்தோட்டை எம்.பியும் பிரதி தனியார் போக்குவரத்து அமைச்சருமான திரு.கே.பி.கபிரத்னவின் அந்தரங்கச் செயலாளர் திரு.கே.எம்.சுனில் பண்கரத்ன என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பொரல்லை நலந்தா கல்லூரியில் இரண்டாந் தவணைக்கான பரீட்சை வினாத்தாள்களை இனந்தெரியாத நபர்கள் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

14.7.88

,புத்தளத்திலுள்ள பழைய சாக்கு, போத்தல் கடையொன்றிலிருந்து இலவசத் தமிழ் மொழிப் பாடப்புத்தகங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த பல்கலைக்கழக மாணவர்களில் 23 பேரைமட்டும் விடுதலை செய்யும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. இதனையடுத்து பலமாதங்களாக மூடப்பட்டிருக்கும் எட்டுப் பல்கலைக்கழகங்களில் ஏழு பல்கலைக்கழகங்கள் ஆகஸ்ட் முதல் மீண்டும் செயற்பட வழி பிறந்துள்ளதாக நம்பப்படுகிறது.

கடந்தகாலச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களின் நிவாரண, புனர்வாழ்வுப்பணிக்கு 389 கோடி ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு அமைச்சின் தொடர்புடைய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

15.7.88

13.7 88 அன்று திருமலை மாமயபுர அகதிகள் தரித்துச் செல்லும் முகாம் கட்டிடம் இனந்தெரியாதோரால் தீவைத்து எரிக்கப்பட்டது.

வவுனியாவிலிருந்து இரண்டு மைல் தொலைவிலுள்ள வெளிக்குளம் பகுதியில் இ.போ.ச பஸ் வண்டியொன்று பிரயாணிகள் இறக்கப்பட்டு இளைஞர் கோஷ்டியொன்றினால் தீக்கிரையாக்கப்பட்டது.

யாழ் மாவட்ட வாசிகளுக்கு இன்னமும் உணவுமுத்திரை வழங்கப்படாததால் வறுமை கோட்டுக்குக் கீழே வாழும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை இராணுவத்தினரால் 28.12.85ல் கைதுசெய்யப்பட்ட திருமலை உப்புவெளியைச் சேர்ந்த வாலிபரான செல்லையா ரவீந்திரன் 22 9.86ல் விடுவிக்கப்பட்டதாக கூறப்பட்டபோதிலும் அவர் இன்னமும் பூசா இராணுவத் தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அதிர்ச்சித் தகவல் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் வெளியாகியுள்ளது,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வடமராட்சிப் பகுதியில் இந்தியப்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

16.7.88
மாகாணசபைகள் அமைக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற முதலாவது பாராளுமன்ற இடைத்தேர்தலில் கட்டுகம்பொலை, வெலிமடை, கெக்கிராவ ஆகிய மூன்று தொகுதிகளையும் ஐ.தே.கட்சி மீண்டும் தன்வசமாக்கியுள்ளது. சுதந்திரக்கட்சி இரத்தினபுரித் தொகுதியைமட்டும் ஐ.தே.கட்சியிடமிருந்து கைப்பற்றியுள்ளது.

நடைபெற்ற நான்கு இடைத்தேர்தல்கள் தொடர்பாக மொத்தம் 54 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புளியங்குளம் வழியாக சுமார் 200வாகனங்கள் இராணுவத் தளவாடங்களுடன் பெருந்தொகையான இந்தியப்படையினர் முல்லைத்தீவு, நெடுங்கேணிப்பகுதிகளை நோக்கிச் சென்றனர். நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், தண்ணீருற்று, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் இவர்கள் தேடுதலை மேற்கொண்டுள்ளனர்.

அம்பாறை வளத்தாப்பிட்டியில் 13.7.88 அன்று ஆயுதம் தரித்த இளைஞர்களால் சந்திரன் ரவீந்திரன், சந்திரன் ராஜன், சின்னத்தம்பி கந்தராசா அவரது மனைவி ஆகிய நால்வரும் கடத்திச் செல்லப்பட்டனர். பின்னர் இவர்களில் மூவரின் சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் பலாவெளிச்சந்தியில் காணப்பட்டன. கந்தராசாவின் மனைவி காயங்களுடன் அம்பாறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியாவிற்கும் மாங்குளத்திற்கும் இடையிலுள்ள இரயிற் பாதை வவுனியாவிலிருந்து மூன்றரைமைல் கல்லில் வைத்து இனந்தெரியாதோரால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

பாவற்குளம் நான்காம், ஐந்தாம் யுனிற் கிராமங்களில் இடம்பெற்ற தேடுதலில் கைதானோரில் ஒருவரான நடராசா நித்தியானந்தன் என்பவர் வவுனியா அமைதிப்படை முகாமில் வைத்து உறவினர்களிடம் சடலமாக ஒப்படைக்கப்பட்டார்.

ஐயாயிரம் இலங்கைத் தமிழர்களில் 1500 பேர் தஞ்ச உரிமை பெறுவதற்கான சகல சட்டரீதியான பரிகாரங்களிலும் தோல்விகண்டுவிட்டார்கள். அண்மைய எதிர்காலத்தில் அவர்கள் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்படவேண்டும். இவ்வாறு சுவிஸ் குடியேற்ற வாசிகளின் விவகாரங்களைக் கையாளும் சிரேஷ்ட உயர் அரசாங்க அதிகாரியான திரு. ஆர்யென்ஸ் இலங்கை வெளிவிவகார அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

17.7.88
பதுளையில் மடுல்சீம பொலிஸ் நிலையத்தை 16 7 88 அன்று ஆயுதம் தரித்த சுமார் 25 பேர் முற்றுகையிட்டு ஒரு பொலிஸ்காரரை கத்தியால் குத்திக்காயப்படுத்திவிட்டு அங்கிருந்த ஆயுதங்களையும் தோட்டாக்களையும் வெடிமருந்துகளையும் சூறையாடிச் சென்றுள்ளனர்.

www.tamilarangam.net

ஆகஸ்ட் மாத இறுதிக்குள் மலையக பகுதிகளில் வாழும் சுமார் ஒன்றரை இலட்சம் பேருக்கு பிரஜாவுரிமை கிடைக்கக்கூடிய புதிய சட்டத்தின் முன்னோடியாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளரான திரு. எம். பி. ரட்னாயகா மலையகத்தின் சில முக்கிய பகுதிகளுக்கு விரைவில் செல்லவிருக்கிறார்.

பரந்தன் சென்றியில் 15.7.88 அன்று பாதுகாப்புக் கடமையிலிருந்த இந்திய ஜவான்மீது இளைஞர்கள் கோஷ்டியொன்று துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில்ஐந்து பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதனிடையே வவுனியா மன்னார் வீதியிலுள்ள பூவரசங்குளத்தில் இந்தியப்படையினர் முகாம் அமைத்துத் தேடுதல் மேற்கொண்டுள்ளனர்.

பேருவளை முதலாவது எம்.பி ஜனாப் இம்தியாஸ் பாக்கீர்மாக்காரின் செயலாளர் திரு. வாசன் 15.7.88 அன்று இனந்தெரியாத இருவரினால் சுடப்பட்டு மரணமானார்.

19.7.88

16.7.88 அன்று நடைபெற்ற கண்ணிவெடிச் சம்பவமொன்றில் நான்கு இந்தியப்படையினர் கொல்லப்பட்டதன் விளைவாக ஊறணி, கனகர்கிராமம், சொட்டை 60ம் கட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த120 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் அகதிகளாகி பொத்துவில் பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

அம்பாறை பொலிஸ் பிரிவிலுள்ள கல்மடுவ கிராமத்தில் ஆயுதம் தரித்த இளைஞர் கோஷ்டியொன்று வீடுகள், கடைகள் என்பவற்றில் கொள்ளையடித்துள்ளது.

கொழும்பு கடுவெல பகுதியில் என். திலகரத்ன என்பவரும், ஹனுகம்வெகரவில் டட்லி அபேசன் என்பவரும் சியம்பலாண்டுவையில் எம். சுதபண்டா என்பவரும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரிக்கருகில் நடைபெற்ற மோதலையடுத்து சித்தன்கேணி, சுழிபுரம், வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் இந்தியப்படையினர் தீவிர தேடுதல் வேட்டை நடாத்தியுள்ளனர்.

வவுனியா, பூவரசங்குளம், பாவற்குளம் பகுதியைச் சுற்றிவளைத்த இந்தியப்படையினர் தொடர்ந்து தேடுதல் நடாத்தி வருகின்றனர்.

அம்பாறை மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினரான மில்டன் டியல் அபேகுணவர்த்தன என்பவர் இனந்தெரியாதோரால் 17.7.88அன்று சுட்டுக்கொல்லப்பட்டார்.

திருமலையிலுள்ள 83 அகதிக்குடும்பங்களைச் சேர்ந்த 326 பேர் தமிழகத்திலிருந்து மன்னாருக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

திருமலை மாவட்டத்தில் அல்லை, கந்தளாய், 12ம் கட்டை, சூரியபுரப்பிரதேசம், அபேதீபொ, தம்பகமம்சந்தி, பாலம்போட்டாறு, ஆண்டான்குளம், 4ம் கட்டை ஆகிய இடங்களிலும் திருமலை-அநுராதபுரம் வீதியில் 10ம் கட்டை, கித்துள் ஊற்று, ஆகிய இடங்களிலும் திருமலை வடஎல்லையில் தென்னமரவாடி, புல்மோட்டை முதலான கிராமங்களுக்கு அண்மையில் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் வெலிஓயாத் திட்டத்தின் கீழும் சிங்களக்குடியேற்றங்கள் அசுரவேகத்தில் நடைபெறுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

20.7.88
புலிகள் இயக்க உறுப்பினர்களைத் தேடிப்பிடிக்குமுகமாக இந்தியப்படையினர் 19.7.88 அன்று வடக்கே மன்னார், முல்லைத்தீவு, ஓமந்தை, புளியங்குளம், நெடுங்கேணிப் பகுதிகளிலும் கிழக்கே வாகரை உகவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதியிலும் பகல்நேர ஊரடங்குச் சட்டத்தை அமுல்ப்படுத்தி எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

பரந்தன் கடைவீதியில்வைத்து இந்தியப்படையினரால் குடும்பஸ்தர் ஒருவர் தாக்கப்பட்டு மரணமானார்.

"எம்மீது விசாரணையை நடத்துங்கள். அல்லது விடுதலை செய்யுங்கள்" என்று கோரிக்கையை முன்வைத்து நீர்கொழும்புச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் பல மாதங்களாகவிருக்கும் 27 தமிழ் இளைஞர்களும் 19.7.88முதல் சாகும்வரை உண்ணாவிரதத்தில் இறங்கியுள்ளதாக அறிவித்துள்ளனர்.

22.7.88
வடபகுதியில் பரவலாக கொள்ளையர்களின் அட்டகாசங்கள் அதிகரித்துள்ளன. ஏழை பணக்காரர் என்ற வேறுபாடெதுவுமின்றி இதற்கு எல்லோரும் இலக்காகின்றனர்.

மீன்பிடித்துக்கொண்டு கரைதிரும்பிய சுமார் 300 பாசையூர் மீனவர்களை கரைக்கு வரவிடாது சுமார் நாலரை மணிநேரம் கடலிலேயே இந்தியப்படையினர் தடுத்து வைத்த சம்பவமொன்று 18.7.88 அன்று இடம்பெற்றுள்ளது.

22.7.88
மொனராகலை பொலிஸ்பிரிவில் ஆயுதம் தாங்கிய கொள்ளைக் கோஷ்டியினால் ஐந்து பாடசாலை அதிபர்களிடமிருந்து அவற்றின் ஆசிரியர் சம்பளப்பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

திருமலையில் குண்டுவெடிச்சம்பவமொன்றையடுத்து திருஞானசம்பந்தர் வீதியைச்சேர்ந்த வீரகத்தி குணசீலன், வித்தியாலய வீதியைச் சேர்ந்த நவரத்தினம் மகேந்திரன் ஆனந்த ஆகிய மூவரும் கத்தியால் வெட்டிக் கொலைசெய்யப்பட்டனர்.

திருமலையில் உணவு விடுதியொன்றில் சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் ஏ.சி.கமீர் முகமட் சகாப்தீன், பி.உவைஸ், விமலதாச, ஆகியோர் உயிரிழந்தனர்.

23.08.88
"இனி மாகாணசபைத் தேர்தலில் வாக்களிக்க மாட்டோம். இது போன்ற மடத்தனமான வேலைகளையும் செய்ய மாட்டோம்." என்று எழுதப்பட்ட அட்டைகளை கழுத்தில் கட்டியபடி பள்ளேமல்ல, திஸ்ஸகிருந்த ஆகிய இடங்களில் பெருந்திரளான மக்கள் அண்மையில் சைக்கிளில் ஊர்வலம் வந்தனர். மாகாணசபைத் தேர்தலில் வாக்களித்தோருக்கு ஜே.வி.பி.யினர் இவ்வாறு தண்டனை வழங்கினர்.

யாழ்-வவுனியா வீதியில் பல புதிய தடை முகாம்களை இந்திய இராணுவம் அமைத்து வருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடந்த ஜூலை மாதம் பருத்தித்துறையில் இரண்டு இந்திய இராணுவம் கொல்லப்பட்டதையடுத்து பொதுமக்கள் பலர் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டனர். தாக்கப்பட்ட மக்கள் மத்தியில் இந்திய அதிகாரி ஒருவர் பேசுகையில் "எங்களால் உங்களைக் கொல்லவும் முடியும். மேலும் படையினர் கொல்லப்பட்டால் ஆண்களை மட்டுமல்ல பெண்களையும் விடமாட்டோம்" என்று கூறினார்

27.08.88

இந்தியாவிலிருந்து கப்பல் மூலமாக கிழக்கில் மேலும் ஆயுதங்கள், இராணுவ வாகனங்கள் என்பன குவிக்கப்பட்டு வருகின்றன.

யாழ் குடா நாட்டில் மீண்டும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

28.08.88

"எம்மை விசாரணை செய்யுங்கள் அல்லது விடுதலை செய்யுங்கள்" என்ற கோரிக்கையை வைத்து 27 தமிழ் விளக்க மறியல் கைதிகள் நீர் கொழும்புச் சிறையில் தொடர்ந்து உண்ணாவிரதமிருந்து வருகிறார்கள்.

"இந்திய இராணுவம் இங்கு வராவிடில் வட, கிழக்கில் தனிநாடு தோன்றியிருக்கும்" - இலங்கை சனாதிபதி.

30.07.88 சூட் டொச்ச சைற்றுங்

சுவிஸ் நாட்டின் தஞ்ச விவகாரப் பொறுப்பாளர் திரு. பீற்றர் ஆபன்ஸ் யாழ்குடா நாடு தவிர்ந்த தனது இலங்கைச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ளார். திருகோணமலையில் இவரும், இவரது குழுவினரும் தங்கியிருந்தபோது உணவு விடுதியொன்றில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தின் விளைவாக 3 தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். திரு. ஆபன்ஸ் பத்திரிகையாளர் மகாநாட்டில் உரையாற்றும் போது தஞ்சம் நிராகரிக்கப்பட்ட தமிழர்கள் நாட்டுக்குத் திருப்பியனுப்பப்பட நிர்ப்பந்திக்கப்பட மாட்டார்கள் என்றும், தாமாக திரும்பிச் செல்ல விரும்புவோர் ஊக்குவிக்கப்படுவார்கள் என்றும், தஞ்சக் கோரிக்கைகளை கையாளும் முறையில் எந்தவித மாற்றங்களும் செய்யப்பட மாட்டாது என்றும் குறிப்பிட்டார்.

சுவிஸ் நாட்டில் சுமார் 5,000 தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தெரியுமா?

01. சீனப்பெருஞ்சுவர் எப்போது கட்டப்பட்டது?
02. ஜேர்மனியின் எல்லை நாடுகள் எத்தனை? எவை?
03. உலகிலேயே மிகப்பெரிய கோயில் எங்குள்ளது?
04. உலகிலேயே மிகப்பெரிய கலைக்கூடம் எங்குள்ளது?
05. உலகிலே தனியாரால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகங்கள் எத்தனை? எங்கெங்குள்ளன?
06. உலகிலேயே மிகப்பெரிய ஏரி எது?
07. உலகில் மிகவும் பெரிய தேசப்படப்புத்தகம் எங்குள்ளது?
08. மிக வேகமாக வளரக்கூடிய தாவரம் எது?
09. கேட்கும் திறனற்றிருந்தும் இசை மேதையாக வாழ்ந்தவர் யார்?
10. இரண்டாவது உலக மகாயுத்தம் எப்போது நடைபெற்றது?
11. இலங்கையின் தேசியப் பறவை எது?
12. குருடராக வாழ்ந்த கவிஞர் யார்?

விடைகளைக் கண்டுபிடிக்க வேண்டுமாயின் புத்தகத்தைத் தலைகீழாகத் திருப்பியேயாக வேண்டும்.

விடைகள்.

01. கி.மு 228ல்
02. ஒன்பது நாடுகள். லக்சம்பேர்க், பிரான்ஸ், சுவிஸ், செக்கோசெலவாக்கியா, கிழக்கு ஜேர்மனி, டென்மார்க், நெதர்லாந்த், பெல்ஜியம், ஒஸ்றிச்.
03. கம்பூச்சியாவிலுள்ள விஸ்ணு கோயில்.
04. சோவியத் யூனியனில் லெனின்கிராட் நகரில்.
05 (1) தமிழ்நாட்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (2) அமெரிக்காவிலுள்ள றொக்பெலர் பல்கலைக்கழகம்.
06. சோவியத்தில் உள்ள கஸ்பியன் ஏரி.
07. மேற்கு பேர்ளின் நகர வாசலில் வைக்கப்பட்டுள்ளது.
08. மூங்கில். (ஒரு நாளில் ஒரு மீற்றர்கூட வளரக்கூடியது.)
09. பீத்தோவன்.
10. 1939 தொடக்கம் 1945 வரை.
11. காட்டுக் கோழி.
12. கவிஞர் மில்டன்.

www.tamilarangam.net

# இறுதி வார்த்தை

இன்று
மயிரிழையில் ஆடிக்கொண்டிருக்கிறது
வாழ்வு.

குருதி கொப்புளித்துப்
பிரவாகம் எடுக்கும் கண்களுடன்
மரணத்தின் படைவீரர்கள்
எந்த நேரமும் வரலாம்.

குருட்டு விசுவாசமுள்ள
முரட்டுப் போர்க் குணத்துக்கும்
முரட்டு விசுவாசமுள்ள
குருட்டுப் போர்க்குணத்துக்கும்
நன்றி.

மனிதம் உருவழிகையில்
மௌனத் திரையிறக்கி
நிஷ்டை கூடுதல்
கவிஞனுக்கு அப்பாற்பட்டது.
பேசுகிற கவிஞன் ஒரு கண்ணிவெடி
பேசாதவன் பிறகு
பிரளயமாவான்.

வாழ்வு
காற்றொரு துளியும்
கடலொரு பிடியும்
புணர்ந்து பிறந்த நுரை அல்ல
என்பதை
எல்லோரும் உணர வேண்டும்.

www.tamilarangam.net

மேலும்
இரத்தம் எப்போதும் சிவப்பு அல்ல
உறைந்த பிறகு
கறுப்பு என்பதையும்.

நல்லவை, அல்லவை
எல்லாவற்றையும் தீயிலிடும்
ஒரு கண்முடித்தனமான வேள்விக்கு
வேத மந்திர கோஷம் முழங்க
எல்லா இடங்களிலிருந்தும்
வருகிறது காளான்.

நட்பும்
நேசமும்
நியாயமும்
நுழைய முடியாமல்
உறைந்த பருத்தி ஆடைகளுக்குள்ளும்
தடித்த முதலைத் தோலுக்குள்ளும்
இருண்டு கிடக்கின்ற
இதயத்தின் அறைகளுக்குள்
எங்காவது ஒரு மூலைக்கு

எரியும் என் சிதை
ஒரு சிறு வெளிச்சம் தரட்டும்.

அந்த வெளிச்சத்திலிருந்து
ஒரு பாடல் பிறக்கும்.

வீரம் விளைந்த சிந்தப்படாத
இரத்தத்தின் கறை படிந்த
கரங்களால்
குழந்தைகளை, கவிதைகளை
மலர்களைத் தொடாமல்.....

சேரன்

www.tamilarangam.net

# அமெரிக்காவின் குப்பைத் தொட்டி!

மூன்றாம் உலக நாடுகள் ஏகாதிபத்தியங்களின் வேட்டைக்காடாக மாற்றப்பட்டதோடு இப்போது குப்பைத் தொட்டியாகவும் மாறிவிட்டது. கடந்த பல்லாண்டுகளாக நஞ்சாகிப் போன கழிவுப் பொருட்களை அமெரிக்கா கப்பல் கப்பலாக மூன்றாம் உலக நாடுகளில் கொண்டுவந்து கொட்டியுள்ளது என்ற அதிர்ச்சியூட்டும் தகவல் சமீபத்தில் வெளிவந்துள்ளது.

அமெரிக்க தனியார் ஆயுதத் தளவாட ஆலைகளிலிருந்தும், மற்றும் பிற ஆலைகளிலிருந்தும் ரசாயனக் கழிவுகள், மருந்துப் பொருட்களின் கழிவுகள், அமிலச் சாம்பல்கள், பாதரசக் கழிவுகள், அணு கழிவுகள் முதலானவை இந்தியா, பிலிப்பைன்ஸ், மெக்சிகோ, ஆப்பிரிக்கா முதலான 38 மூன்றாம் உலக நாடுகளில் கொண்டுவந்து கொட்டப்பட்டுள்ளது. அணுக் கழிவுகளால் ஏற்படும் கதிரியக்கம் மனித இனத்துக்கே ஆபத்தாகும். மற்றபிற கழிவுகளால் நிலத்தடிநீர் நஞ்சாவது, பயிர்கள் சாவியாகுதல், சுற்றுச்சூழல் நஞ்சாகுதல், புதிய தலைமுறையினர் பிறப்புக் கோளாறுகளால் உடல் ஊனமாகுதல், புற்றுநோய் பிடித்தல் முதலான கொடிய பின் விளைவுகளை ஏற்படுத்தும்.

அமெரிக்க அணு ஆயுதத் தளவாட ஆலைகளில் ஆண்டுக்கு 400 டன் கழிவு சேர்கிறது. அத்தனையும் இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் ரகசியமாக கொட்டப்பட்டுள்ளது. அல்லது அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதியாகும் பொருட்களோடு சேர்த்து அனுப்பப்படுகிறது. அல்லது இக்கழிவுகளை பயன்பாட்டுக்கான பொருட்களாக காட்டி மோசடி செய்து, அவற்றை ஏற்றுமதி செய்து அதிலும் கொள்ளையடிக்கிறது. இப்படித்தான், நஞ்சாகிப்போன துத்தநாக கழிவுத்தான்களை கக்கூசில் பயன்படுத்தும் தான்கள் என்று ஏய்த்து ஒரு ஆப்பிரிக்க நாட்டுக்கு அமெரிக்கா ஏற்றுமதி செய்துள்ளது. ஏற்கனவே ஐரோப்பிய நாடு நாடுகளிலிருந்து வங்கதேசத்துக்கு உதவியாக அனுப்பப்பட்ட வெண்ணெய் அணுக்கதிரியக்கம் பரவிய நஞ்சாக இருந்தது.

கடன்பட்ட ஏழைநாடுகளுக்கு அணுக்கழிவுகளை ஏற்றுமதி செய்வதோடு, அதிலும் கொள்ளையடிப்பது அமெரிக்காவின் அயோக்கியத்தனம் என்று சர்வதேச சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள் குழுவே கடுமையாக கண்டனம் தெரிவித்துள்ளது.

(புதிய ஜனநாயகம் 1-15 மே)

மன்னிப்புக் கோருகின்றோம்

'தூண்டில்' கலம் ஏழில் பிரசுரமாகியிருந்த சேரனின் '29 ஜூலை 1987' என்ற கவிதையில் 32ம் பக்கத்தில் வரவேண்டிய கவிதைப் பகுதி 33ஆம் பக்கத்திலும், 33ஆம் பக்கத்தில் வரவேண்டிய கவிதைப் பகுதி 32ஆம் பக்கத்திலும் மாறிப் பிரசுரமாகிவிட்டது. இத் தவறுக்காக சேரனிடமும், வாசகர்களிடமும் மன்னிப்புக் கோருகின்றோம்.

— கடலோடிகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(16ம் பக்கத் தொடர்ச்சி)

யாதென தானே பெருமைப்பட்டுக் கொண்டான்.

"உண்மையைக் கூறியதற்காக உனக்கு நன்றிகள். உன்னுடைய சமூகத்திலிருந்து நீ கொஞ்சமும் வேறுபட்டவனல்ல என்பதை பகிரங்கமாகவே தெரிவித்துவிட்டாய்" என்று ஸில்வியா சொல்ல ஜீவன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

"உன்னுடைய சமூகத்தைப் பற்றியும், அதன் நடைமுறைகள், வழக்கங்கள் பற்றியும் நான் மிக நன்றாகவே தெரிந்து வைத்திருக்கிறேன். வாழ்க்கைத் துணையென்று சொல்லித் திருமணம் செய்து கொள்ளும் பெண்களை விலங்குகளை வைத்து வேலை வாங்குவது போல அடிமையாக வைத்து ஊழியம் செய்ய வைக்கிறீர்கள் என்பதை விபரமாகவே படித்திருக்கிறேன். உனக்கும், உனது ஆண் வர்க்கத்திற்கும் இருக்கும் சுதந்திரங்களில் ஒரு பகுதியைக்கூட திருமணம் செய்வதற்கு முன்போ, பின்போ பெண்களுக்கு நீங்கள் கொடுப்பதில்லை என்று நன்றாகவே தெரியும். ஒரு பெண் ஒரு ஆணுடன் சகஜமாகப் பழகுவதைக் கூட ஏற்றுக் கொள்ளாத அழுக்கு மனம்தான் உனக்கும், உனது வர்க்கத்திற்கும் இருக்கிறது.

நான் உன்னைக் காதலிப்பதாக ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. அதற்குள்ளேயே என்னைக் கட்டுப்படுத்தவும், உரிமை கொண்டாடவும், சந்தேகப்படவும் முனைந்து விட்டாய். உன்னைப் போன்றவர்களைத் திருமணம் செய்து கொண்டு, வாழ்நாள் முழுவதும் சேவகம் செய்யும் அடிமையாக கூண்டில் அடைபட நான் என்ன முட்டாளா?

உனக்கு என்மேல் இருப்பது காதலல்ல. இச்சை. உனக்கு இரண்டு தேவைகள் இருக்கின்றன. ஒன்று இந்த நாட்டின் குடியுரிமை. இரண்டாவது என்னுடைய வெள்ளை உடம்பு. உன்னுடைய முதலாவது தேவைக்கு என்னால் எதுவும் செய்ய முடியாது. இரண்டாவதற்கு வேண்டுமானால் சில முகவரிகள் தருகிறேன். உன்னோடு வெறும் நண்பியாகப் பழகவே எனக்கு அருவருப்பாக இருக்கிறது. உனது நாட்டுக்குத் திரும்பிப் போகும் போதாவது உனது அழுக்கு மனதை சலவை செய்து கொண்டு போ."

நிறுத்தாமல் பேசி முடித்துவிட்டு ஸில்வியா போய் விட்டாள்.

ஜீவன் அப்படியே நின்று கொண்டிருந்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாசகர் கடிதங்கள்

'இந்திய ஆக்கிரமிப்பும் எமது போராட்டமும்" என்ற கட்டுரையில் கட்டுரையாளர் திரு.மயூரன் அவர்கள் தூண்டில் பக்கம் 29இல், இரண்டாம் பந்தியில் இப்படி எழுதுகிறார்.

"....எமது நாட்டில் ஆளும் தரகு முதலாளித்துவ வர்க்கத்திற்கும், குட்டி முதலாளித்துவ வர்க்கத்திற்கும் உள்ள முரண்பாட்டை திசை திருப்ப இனத்துவேசக் கொள்கையை அரசு கடைப்பிடிக்கிறது. இன ஒடுக்கு முறையில் வர்க்க அடிப்படை என்பது இதுவே" என்று ஆணித்தரமாகக் கூறுவது போல் எழுதுகிறார்.

இவர் கூறும் கருத்து மிகவும் கொடூரமானது. 'புத்த மறுமலர்ச்சியின் பொற்காலம்' என்ற பொய்மையிலேயே சிங்கள, பௌத்த இனவாதம் தோன்றியது. 1850ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் ஐரோப்பிய அரசாட்சியாளர்களால் 'ஆரியர்' என்ற பிரித்தாளும் கருத்து பரப்பப்பட்டது. தனித்துவம் தேடிய பௌத்த மறுமலர்ச்சியாளர்கள் தமது 'இன உணர்வையும்' பண்டைய பண்பாட்டு மதிப்பையும் 'ஆரியர்' என்ற பொய்மையான இனக் கருத்தோடும், பௌத்த மதத்தோடும் இணைத்து உயர்த்தினார்கள். பின் பௌத்த மத அறிவு ஜீவிகள் தமது ஆக்கங்கள் மூலமும், நாடகங்கள் மூலமும் இனத் துவேசத்தை வளர்த்தார்கள். 'தர்ம தீபத்தின்' மதம் புத்த மதம் என்றும் சிறுபான்மை இனங்களான தமிழர், முஸ்லீம்கள் சிங்கள பௌத்த மதம் சார்ந்திராதவிடத்து இன, மத, ரீதியாக அவர்கள் தரம் குறைந்தவர்களென்றும் 1912இல் அநாகரிக தர்மபாலாவினால் முன்வைக்கப்பட்டு இனத்துவேசம் வளர்க்கப்பட்டது. இப்படி ஏற்பட்ட இனத்துவேசம் பன்மடங்கு வளர சிங்கள அரசு துணைபுரிந்தது. ஆதலால் மயூரன் எழுதிய காரணத்திற்காக மட்டும் 'இனத்துவேசக்' கொள்கையை இலங்கை அரசு கடைப்பிடிப்பதாக சித்தரிப்பது முற்றிலும் முரணானதாகும். இன ஒடுக்குமுறையில் வர்க்க அடிப்படை என்பது இதுவே என்றும் மயூரன் எழுதுகிறார். இவை யாவும் தவறான வாதங்கள். எனவே கட்டுரையை எழுதும்போது சரியான ஆய்வின் 'மூலம்' கொண்டு எழுதுவது தமிழர்களுக்கு நன்மையளிக்கும். இல்லையேல் மீண்டும் திரிபுவாதம் தலைதூக்கும். சரியான திசை தெரியாமல் தூண்டில் வாசகர்கள் தவறான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்துகளை தமது மனதில் பதித்துக் கொள்வார்கள். இது தமிழ்ச் சமுதாயத்துக்குச் செய்யும் துரோகம் என்றாகிவிடும். கட்டுரையாளர் சிந்திப்பாரா?

'ஒப்பந்தங்களும் ஒப்பாரிகளும்' ஆசிரிய தலையங்கமும், மு. திருநாவுக்கரசுவின் அநுபவ மொழியும் ஈழப் போராட்டத்திலிருந்து அந்நியப்படுவோரைச் சிந்திக்கத் தூண்டுவதோடு மட்டுமல்லாது ஆசிரியர் குழுவின் விருதலைப்பற்றையும் பறைசாற்றுகிறது.

தூறன்பேர்க் ப. வி. சிறீரங்கன்

'தூண்டில்' கொஞ்சங் கொஞ்சமாக அரசியல் களத்திற்கு வந்ததையிட்டு மகிழ்ச்சி. அரசியல் ஆக்கங்களின் நடுநிலைப் போக்கு நல்ல நிலை. இது தொடர வேண்டும். ஆசிரிய தலையங்கமும், அட்டைப் படமும் அருமை.

'இந்திய ஆக்கிரமிப்பும் ஈழப் போராட்டமும்' சம்பந்தமான மயூரனின் பார்வை சரியானதே. ஆனல் போராட்டப் பாதை இலகுவானதல்ல. (வேறு வழியில்லை) அத்துடன் மிகவும் நீளமான போராட்டத்திற்கு தற்காலத் தீர்வொன்று அவசியம் தேவை. அதை மயூரன் முன்வைக்கவில்லை.

இலங்கை அரசின் இன ஒடுக்கல், இந்திய ஆக்கிரமிப்பு, சர்வதேச வல்லரசுகளின் போட்டா போட்டிகள், சர்வதேச அரங்கில் முற்போக்குச் சக்திகளின் நலிவு, இவற்றை விட ஈழதேச மக்களின் குளும்சங்கள், குட்டி முதலாளித்துவ சக்திகளின் அடாவடித்தனங்கள், அராஜகங்கள், ஈழத்தில் முற்போக்குச் சக்திகள் தலைதூக்க முடியாத சூழ்நிலை, தென்னிலங்கை இடதுசாரிகளின் (?) பலம் இவற்றை எல்லாம் பார்க்கும்போது பாட்டாளி வர்க்கப் போராட்டமானது நீண்டதொரு போராட்டமே. இதனை முன்னெடுப்பதற்கு முதலில் போராடுவதற்குரிய சூழ்நிலையை உருவாக்குவது அவசியம். எனவே தற்போதைய சூழ்நிலைக்கேற்றவாறு தற்காலிகத் தீர்வொன்றை உருவாக்க ஈழத்து முற்போக்கு ஜீவிகள் முன்வர வேண்டும். ஆனல் நிச்சயம் இது நிரந்தரத் தீர்வாக இருக்க முடியாது.

'களவை மிதித்தவன்' தொடர்கதை நன்றாகப் போகிறது என்பதைவிடப் பிரயோசனமாகப் போகிறது என்பதே கூடப் பொருந்தும். தொடரட்டும்.

பிரான்ஸ் எஸ். மனோகரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சமூகசேவை நிறுவனங்கள்

சில சமூக சேவை நிறுவனங்களின் பெயர்கள் கீழே எழுதப்பட்டுள்ளன. இவற்றில் சிலவேனும் ஒவ்வொரு நகரத்திலும் இருக்கும். இந் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு 'நேரமும் நாங்களும்' என்ற ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்களைச் செயற்படுத்தத் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

* Caritasverband
* Arbeiterwohlfahrt
* Desi
* Diakonischewerk
* Fluchtlingszentrum
* Drittewelt zentrum
* Ausländerzentrum
* Förderkreis für ausländischearbeit
* Socialdienst für Asylbewerber
* Verein zur förderung der ausländischearbeit
* Deutsche-ausländische freundschaftkreis

---

## தமிழ் நூல்கள் பரிமாற்ற வட்டம்

விற்றன் நகரில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள தமிழ் அகதிகளுக்காக விற்றன் நகரப் பொதுநூல்நிலையத்தில் தமிழ்ப் பிரிவு 1986ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பத்திரிகைகள், சஞ்சிகைகள், பல தரப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய புத்தகங்கள் போன்றவை இடம்பெற்றிருக்கும் இத் தமிழ்ப் பிரிவால் பல வாசகர்கள் தமது நேரத்தைப் பயனுள்ளதாக்கி வருகிறார்கள்.

விற்றன் நகர வாசகர்கள் மட்டுமல்லாது மேற்கு ஜேர்மனியிலிருக்கும் ஏனைய தமிழர்களும் இத் தமிழ்ப் பிரிவால் பயனடையலாம். உங்களுக்கு ஆர்வமிருப்பின் உங்கள் நகரிலுள்ள பொதுநூல்நிலையத்துக்குச் சென்று விற்றன் நகரப் பொதுநூல்நிலையத்தில் தமிழ் நூல்கள் இருப்பதையும், அவை ஏனைய நூல்நிலையங்களுக்கும் அனுப்பப்படுவதையும் தெரிவியுங்கள். அவர்களே நேரடியாக கீழுள்ள முகவரியுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

STADTBÜCHEREI
z.Hd.Herrn.Parthipan
Ruhrstr 48
5810 Witten

Tel:(02302) 58185 16/18



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசத்தின் அழைப்புகள்

இருட்டுக்கூட
எங்களுக்காக
கரைந்து போனது.

வான் அதிர்வும்
சூரிய உதிர்வும்
சந்திரச் சிதைவும்
நட்சத்திர நசுங்கலும்
நடந்து முடிந்ததாம்
எதிரி
வரலாறு எழுதிக் கொண்டான்.

அப்போதுதான்---

வெளிச்சத்தின் வெளிச்சம்
எம்மீது விழுந்தது.

எங்கள்
மண்
சிலிர்த்துக் கொண்டது

அருகம்புல் நுனியும்
ஆகாயத்தையே சுமக்க
நிமிர்ந்து நின்றது

அடிமை இருட்டைத் தின்று முடிக்க
ஆயிரமாயிரம் சூரியர்கள்
அணிவகுத்துப் புறப்பட்டது

சந்திரச் சிதைகள்
வாழ்வுச் சமையலுக்காக
சுள்ளி முறிக்க
சுதந்திரக் காட்டைத் தேடியது

நகரமுடியாத
நட்சத்திரங்கள்கூட
விடிவெள்ளியையே
விளையாடக் கேட்டது
எதிரியின் மார்பில்
நாம் எழுதிய வரலாறு.

சிறைகள் கூட
பசித்துப்போனது
தமிழனையே தின்றன.

சிங்கங்களே
சிறைகள்
உங்களைத் தின்றன.

நீங்கள்தான்
எங்கள்
சிறைகளைத் தின்றீர்கள்.

எமக்கென்று
வானம் இருப்பதையும்

அதற்கொரு
சூரியன் தேவையென்றும்
உணர்ந்தோம்.

நேற்றில்
உணர்ந்தோம்.

இன்றில்
உழைக்கிறோம்.

நாளையில்
உருவாக்குவோம்.

கவிவர்மன்

# நூல் அறிமுகம்



ஆசிரியர் : கே. சிவசூரியர்

முகவரி : Theresenstr 30
4200 Oberhausen 1


விலை : இலவசம்

1988 ஜனவரியிலிருந்து மாத இதழாக வெளிவருகிறது.

பக்கங்கள் 36.

ஆசிரியர் குறிப்பு, சிறுகதை, கவிதைகள், சிறுவர் பகுதி, பெண்கள் பகுதி, குறுக்கெழுத்துப் போட்டி, தொடர்கதை, கட்டுரைகள் போன்ற விடயங்கள் இடம் பெறுகின்றன.

www.tamilarangam.net



# கனவை மிதித்தவள்

— பார்த்திபன்

"இன்னொருக்கா படி மீனு" விசாலம் கன்னீர் அரும்பச் சொன்னாள்.

மீனு தாயை ஒரு தரம் பார்த்தாள். அம்மாவா என்ற ஆச்சரியம் அவளுள் எழுந்தது. கூடவே துக்கமும் வந்து தொண்டையை அடைத்தது.

கேசம் கலைந்து, முன் நெற்றி விசாலமாகி, முகம் சோர்ந்து, உடம்பு தளர்ந்து, சுருங்கி சேலைக்குள் வைக்கப்பட்டு.... விசாலம் உன்மையாகவே மாறிப் போயிருந்தாள். குரலில் கூட பழைய கம்பீரம் இல்லை. கன்களில் மட்டும் கன்னீர் எந் நேரமும் தயாராக இருந்தது.

மேற்கு ஜேர்மனியிலிருந்து ஞானம் போட்டிருந்த கடிதத்தை மீனு மறபடி படித்துக் காட்டினாள். அவளுக்கே அண்ணனின் கடிதம் ஆச்சரியமாக இருந்தது. வந்த கடிதம் கிட்டத்தட்ட பாவமன்னிப்பாகவே இருந்தது. மஞ்சுவின் சாவுக்குத் தான்தான் காரணமென்று ஞானம் கடிதத்தில் பலமுறை குறிப்பிட்டிருந்தான். இப்போது தான் மும்முரமாக வேலை தேடிக் கொண்டிருப்பதாகவும், ஓரளவுக்குத் திருப்தியாக சம்பாதித்த பின் நாட்டுக்குத் திரும்பி வருவதாகவும் எழுதியிருந்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எவ்வளவு இடைவெளிக்குப் பின் ஒரு கடிதம். அதுவும் முற்றிலும் எதிர்பார்க்காத விதத்தில். உண்மையாகச் சொல்லப் போனால் அவர்கள் ஞானத்தை மறக்க ஆரம்பித்திருந்த நேரம்.

மீனுவுக்கு இப்போதும் சந்தேகமாகவே இருந்தது. 'இதை அண்ணதான் எழுதினவரோ? அல்லாட்டி வேற ஆரேனும் எழுதினவையோ?

எத்தினை நாள் பட்டினியா இருந்திருக்கிறம். ஆமிக்காறங்கள் சுடேக்க எங்கெயெல்லாம் ஓடித் திரிஞ்சிருக்கிறம். அகதி முகாமில எத்தினைநாள் இருந்திருக்கிறம். வீடே இடிஞ்சு போய் எத்தினைநாள் மண்ணில படுத்திருக்கிறம். அப்ப எல்லாம் ஒரு வரிக் கடுதாசி கூடப் போட்டு விசாரிக்காதவருக்கு இப்ப என்ன அவசரம் வந்துட்டுதாம்?

ஜேமனியில இருக்கிறவையை திருப்பியனுப்பப் போறாங்கள் என்டு பேப்பரில வந்ததுதானே. அதுதான் அண்ணர் உறவைப் புதுப்பிக்கிறாரோ?'

"நான் சொல்லச் சொல்ல எழுதிறியே புள்ளை" விசாலத்தின் குரல் மீனுவின் சிந்தனைகளைக் கலைத்தது. மீனு மறுபடி அம்மாவைப் பார்த்தாள். மகளுக்குப் பதில் போடும் அவசரம் அந்தத் தாயின் முகத்தில் பளிச்சிட்டது. கூடவே மகனின் கடிதம் வந்ததில் ஏற்பட்ட மகிழ்ச்சியும் மறையாமல் இருந்தது.

அவள்தான் தாய்.

கோபம், வஞ்சம், காழ்ப்பு, வெறுப்பு எதையும் வைத்துக் கொள்ளாத ஒரு பிறப்பு.

அநேகமான தாய்கள் பாலுடன் வேறு உணர்வுகளையும் பிள்ளைகளுக்குக் கடத்தியிருக்க வேண்டும். இல்லையெனில் எல்லாவற்றையும் இழந்தபின் இந்தப் பாசம் மட்டும் மறைந்து போகாமல் இருக்குமா?

"இந்தா தொடங்கு" விசாலம் கடுதாசியையும், பேனையையும் தானே தேடிப் பொறுக்கி வந்து மீனுவிடம் திணித்தாள். விசாலத்தால் முன்பு போல எழுத முடியாது. கை நடுக்கம் எல்லை மீறியிருந்தது. கூடவே மங்கிப்போன பார்வையும்.

இப்போதெல்லாம் மீனுதான் விசாலத்தினுடைய கண்களாகவும், கைகளாகவும் இருந்தாள். சமையல் கூட அநேகமாக அவளே பொறுப்பேற்றுள்.

மீனு மட்டுமென்ன, அவளும்தான் மாறியிருந்தாள். தலைமுடியில் நீண்ட காலமாகவே கவனம் எடுக்கப்படவில்லை. முகத்தில் ஆங்காங்கே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமையற் கரிகள் அப்பியிருந்தன. பல தையல்கள் போட்டிருந்த பூப்போட்ட சட்டை தேசிய உடையாகியிருந்தது. முகத்தில் வயதுக்கு மீறிய முதிர்ச்சி. தோற்றத்தில் கூட அவள் பெரிய பெண்ணாகவே இருந்தாள்.

மீனு அப்படியே தரையில் அமர்ந்து கடிதம் எழுதத் தயாரானாள். விசாலமும் அவளை நெருங்கி அமர்ந்தாள்.

"பட்சமுள்ள மகனுக்கு..." என்று கடிதம் ஆரம்பிக்கப்பட்டது. விசாலம் தொடர்ந்து சொல்லிக் கொண்டே போனாள். இடையிடையே கண்ணீர் விட்டாள். கண்ணீரை மட்டும் மீனுவால் கடுதாசியில் பதிய முடியவில்லை.

"இப்படிக்கு, என்னும் உன் அன்பு அம்மா." என்று கடிதம் முடிந்தது. "நீயும் ஏதேன் எழுதிப் போட்டு அனுப்பேன் மீனு"

"இப்போதைக்கு இது காணும்" மீனு கடிதத்தை மடித்தாள். தனது அறைக்குப் போய், கொப்பிகளைக் கிளறி, கசங்கி, மண்பட்டுப் போயிருந்த வான்கடித உறையைக் கண்டுபிடித்து, கடிதத்தை வைத்து எச்சில் பூசி ஒட்டினாள்.

"மீனு இண்டைக்கே அனுப்பு. எப்ப போய் அவனுக்குக் கிடைக்குதோ ஆருக்குத் தெரியும்?"

அம்மாவின் அவசரத்தில் தெரிந்த பாசத்தில் மீனு நெகிழ்ந்து போனாள். இந்தப் பாசத்துக்கு அண்ணன் அருகதையுள்ளவனா என்பது மட்டும் அவளுக்குச் சந்தேகமாகவே இருந்தது.

பலகை கழன்றிருந்த அலமாரியில் துணிகளுக்கிடையே புதைத்து வைக்கப்பட்டிருந்த அடையாளம் தெரியாத பேணியை எடுத்து திறந்து பார்த்தாள் மீனு. எட்டுக்கும் மேலாக மடிக்கப்பட்டிருந்த இரண்டு ருபாய் தாளும், சில்லறைகளும் இருந்தன. அவைகளை கொட்டி எண்ணித் தேவையான காசைப் பொறுக்கிக் கொண்டாள்.

"அம்மா, கடிதம் போட்டிட்டு வாறன்" மீனு சொல்லிக் கொண்டு வீட்டிலிருந்து பாதைக்கு வந்தாள்.

இராணுவ அழிவின் பின் அந்த ஊர் வித்தியாசமான முறையில் மாறியிருந்தது. பல பணக்காரர்கள் முற்றாக காணாமல் போயிருந்தனர். அநேகமாக இந்தியாவுக்குப் போய் வீடு வாங்கி குடியிருக்கலாம். அல்லது ஐரோப்பாவில் இருக்கலாம். சில வேலிகள் மதில்களாக மாறி ஒடுகளும் போட்டிருந்தன. கல்வீடுகள் பலஉடைப்புகளைப் பொருத்தி அவசரமாக வேயப்பட்டிருந்தன. கடைகளில் மட்டும் பழைய கடன் கொப்பிகள் அப்படியே பத்திரமாக இருந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஜெமனிக்கு எவ்வளவு முத்திரை?" இனிப்புப் போத்தல்களுக்கு அப்பால் நின்று மீனு கேட்டாள்.

"ஆறம்பது"

"ஒண்டு தாங்கோ"

"எழிருபத்தைஞ்சு"

ஆறு ருபா ஐம்பது சதம் பெறுமதியான முத்திரையை ஏழு ருபா இருபத்தியைந்து சதம் கொடுத்து வாங்கி கடித உறையில் ஒட்டினாள். ஏனோ திடீரென மீனுவுக்குச் சமூக விரோதியென்ற சொல்லு ஞாபகத்துக்கு வர தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

'இந்தக் கடிதத்தால ஒரு நேரச் சாப்பாடு துண்டு' என்று நினைத்துக் கொண்டு மீனு கடிதத்தைப் பெட்டியில் ஒப்படைத்துவிட்டு வீட்டுக்கு வந்தபோது விசாலம் மாவில் தண்ணீர் விட்டுப் பிசைந்து கொண்டிருந்தாள்.

"அம்மா, இஞ்ச விருங்கோ" என்று தாயிடமிருந்து பாத்திரத்தைப் பறித்து தனது கைகளைப் புகுத்தினாள். பிசைந்து கொண்டிருக்கும் போதே ரொட்டியுடன் தொட்டுக் கொள்ள என்ன இருக்கிறது என்று கண்கள் தேடின. எதுவுமே அகப்படவில்லை.

இன்றே இப்படியிருக்கும்போது நாளைக்கு என்ன செய்வது என்ற கேள்வி பயமுறுத்தியது. நிவாரண உதவிகள் நிறுத்தப்பட்டபின் இப்போதுதான் இந்தப் பிரச்சினை தலைகாட்டுகிறது.

சாப்பிருவதற்கு என்ன வருமானம் இருக்கிறது?

வீட்டில் ஆண்களே இல்லை. விசாலமோ வெறும் எலும்புக்கூடாகத்தான் இருக்கிறாள். வேலைக்குப் போவதென்றால் மீனுதான் போக வேண்டும். அவள் வேலைக்குப் போகத் தயாரென்றாலும் வேலை தெருவில் கொட்டியா கிடக்கிறது?

பெரிய முதலாளிகள்தான் 'பய வரியை'க் கட்டிக்கொண்டு கடையைத் திறந்து வைத்திருக்கிறார்கள். சின்ன முதலாளிகள் ஆளைவிட்டால் போதும் என்ற நிலையில் எல்லாவற்றையும் இழுத்து மூடி விட்டார்கள். எங்கேதான் வேலை கேட்பது?

அவள் உயர்தரம்வரை படித்திருந்தாலும் படிப்பை யார் கேட்கிறார்கள். ஒன்று காசைக் கேட்கிறார்கள். அல்லது உடம்பைப் பார்க்கிறார்கள். இந் நிலையில் வேலை? சாப்பாடு?..

(இன்னும் வரும்)

www.tamilarangam.net

# தூண்டில்

கடல்: 1 ஆகஸ்ட் 1988 கலம்: 8

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்கு பொறுப்பாளிகள்.

ஆசிரியர் குழு.......... கடலோடிகள்

வெளியீடு............. தென்னாசிய நிறுவனம்

முகவரி.................. SÜDASIEN BURO
KIEFERNSTR 45
5600 WUPPERTAL-2
WEST GERMANY.
TEL. 0202·507156

© Nachdruck nur mit Genehmigung des Herausgebers.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

(மாத சஞ்சிகை)

தூண்டிலைக் கிரமமாகப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் கீழே உள்ள தென்னாசிய நிறுவன முகவரிக்கு வங்கி மூலமாக சந்தாப் பணத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

சந்தா விபரம் (தபாற் செலவு உட்பட)


6 மாதங்கள் - 20 டி.எம்.
1 வருடம் - 38 டி.எம்.

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு 2 டி.எம். மேலதிகமாகும்.

ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் கடிதம் எழுதி சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

வங்கி கணக்கு இல. 266540
STADT SPARKASSE WUPPERTAL
BLZ 330 500 00

# SÜDASIEN BÜRO




KIEFERNSTR. 45
5600 WUPPERTAL · 2
WEST GERMANY.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்